பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 01 செவ்வாய்க்கிழமை 17.09.2024 கதிர் 314

### இனிது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களைக் குழப்பவேண்டும், முடிந்தவரையில் தமிழர்களின் வாக்குகளைச்சிதைத்துஇலங்கையின் அரசியல் களத்தில் அவர்களை ☞ 2

## தமிழ் தேசியத்தை ஒற்றுயாட்சிக்குள் முடக்கும் சதியே அரியத்தை ஆதரித்தால் அரங்கேறும்

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் காட்டம்

ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரனுக்கு வாக்களிக்கும் பட்சத்தில், தேர்தலுக்குப் பின்னர் தமிழ்த் தேசிய அரசியலை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கான சகல சதித்திட்டங்களும் முன்னெடுக்கப்படும்என்பதைஇப்போதே கூறிவைக்கிறோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்.மாவட்டநாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர் களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித் ததாவது:

இம்முறை ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ் மக்கள் புறக்கணிக்கவேண்டும் என்ற தமிழ்த்தேசிய மக்கள் ☞ 8



## ஜனாதிபதித் தேர்தல் புறக்கணிப்பாளர்கள் இன்று நிர்வாணமாக்கப்பட்டுள்ளார்கள்

### தமிழ்த்தேசிய முன்னணி மீது விக்னேஸ்வரன் கடும் சீற்றம்

2024ஜனாதிபதித்தேர்தலைப்புறக்கணிக்கின்றோம் என்று கூறும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இன்று நிர்வாணமாக்கப்பட்டுள்ளார்கள். பகிஷ்கரிப்பாளர்களுக்கும் சிங்கள வேட்பாளர்களுக்கும் இடையில் நிச்சயமாக ஒரு உடன்பாடு இருந்தே ஆக வேண்டும். இந்தப்பகிஷ்கரிக்கும்கட்சியினரின்மூலக்கட்சி கூட ஒற்றையாட்சியையே வலியுறுத்துகின்றது. இப்பொழுது தேர்தலைப் பகிஷ்கரிப்போம் என்று ☞ 2



## அரியநேத்திரனை ஆதரித்து நேற்று யாழ்ப்பாணத்திலும்கூடக் கூட்டம்

ஜனாதிபதிவேட்பாளர்அரியநேத்திரனை ஆதரிக்கும் பொதுக்கூட்டம் ஒன்று நேற்று யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் இடம் பெற்றது. தமிழ்த் தேசிய ☞ 9

### ஜனாதிபதித் தேர்தலில் யார் வென்றாலும்

## தமிழருக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க தமிழ் அரசுக் கட்சி தொடர்ந்து உழைக்கும்

### சுமந்திரன் எம்.பி. அறிவிப்பு

2024 ஜனாதிபதித் தேர்தலில் யார் வென்றாலும் தமிழர்களுக்குத் தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதை முன்னிறுத்திய நடவடிக்கைகளில் தமிழ் அரசுக் கட்சி தொடர்ந்து ஈடுபடும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் மூவர் பிரதானவேட்பாளர்களாகஇருக்கின்றார்கள். அவர்கள் மூவருடனும் நாங்கள் பேச்சு நடத்தியிருக்கின்றோம். மூவருமே உச்சபட்ச அதிகாரப் பகிர்வினை முன்னிறுத்தி செயலாற்றுவதாகக்கூறியிருக்கின்றார்கள். அதில் ஏனைய வேட்பாளர்களைவிட சஜித் பிரேமதாசசற்றுஅதிகமாகக்கூறியிருக்கிறார். எனவே அவருடன் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கிறது.

இருப்பினும் சஜித் பிரேமதாஸ வெற்றி பெறாமல் ரணில் விக்ரமசிங்கவோ அல்லது அநுரகுமார திஸாநாயக்கவோ வெற்றியீட்டினால் என்ன நிலைமை என்ற கேள்வி பலரால் கேட்கப்படுகின்றது. அது நியாயமானகேள்வி. எங்களுடையநோக்கம் இவரோ அல்லது அவரோ வெல்ல ☞ 2

### தமிழ் பிரதேச செயலகம் கோரிய

## கல்முனை போராட்டம் தற்காலிகமாக நிறுத்தம்

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினுடைய நிர்வாக உரிமைகளைமீட்பதற்காக174நாட்களாக மேற்கொள்ளப்பட்டபோராட்டமானதுஎதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் நிறைவடையும் வரை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டு இருப்பதாக அனைத்து சிவில் சமூக ஒன்றியம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலான அனைத்து சிவில் சமூக ஒன்றிய நிலைப்பாடு மற்றும் வடக்கு பிரதேச செயலக போராட்டம் அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பில் விசேட செய்தியாளர் சந்திப்பு ஒன்றினை பாண்டிருப்பு பகுதியில் உள்ள அதன் அலுவலகத்தில் நடத்தியபோது இதனைத் தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினுடையநிர்வாகஉரிமைகளை மீட்பதற்காக கல்முனை வடக்கு பிரதேச செயலகஎல்லைக்குட்பட்டுகாணப்படுகின்ற 29 கிராம சேவையாளர் பிரிவுகளுக்குள்ளும் வாழுகின்ற பொதுமக்கள் பொது அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றாக இணைந்துஒழுங்கமைத்து நடத்திக் கொண்டிருக்கின்ற உரிமைக்கான மக்கள் போராட்டமானது இன்றோடு 174 வது நாளாகவும் எமது இலக்கு நோக்கி எமது மக்களுடையஅபிலாசைகளோடு அவர்களால்உருவாக்கப்பட்ட அந்த திட்டமிடல் களோடு தொடர்ச்சியாகநடந்து ☞ 8



## சமையலறைப் பிரச்சினைகளை 2025க்குள் தீர்த்து வைப்பேன்

### அனுராதபுரத்தில் ரணில் தெரிவிப்பு

சமையலறைப் பிரச்சினைகளை 2025க்குள் தீர்த்து வைப்பேன் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கந்தளாய்புகையிரதநிலையத்திற்கு முன்பாக நேற்று நடைபெற்ற 'ரணிலால் இயலும்' வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: ☞ 9

## "தேசமாக எழுச்சி அடைவோம்" மாவையர் நேற்று அறைகூவல்

### அரியநேத்திரனுக்கு ஆதரவான கூட்டத்தில்

தேசமாக எழுச்சி அடைவோம் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா அறைகூவல் விடுத்தார்.

கிளிநொச்சி பசுமைப் பூங்கவில் நேற்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரிக்கும் 'தமிழ்த் தேசிய இனத்தின் எழுச்சியே தமிழ்த் தேசத்தின் மீட்சி' எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற பரப்புரைக் ☞ 2

## அனுராதபுரம் ஜனாதிபதி மாளிகை கல்வி மத்திய நிலையமாக மாறும்

### சஜித் பிரேமதாச நேற்று வாக்குறுதி

ஜனாதிபதி தங்குவதற்கு அனுராதபுரத்தில் மாளிகை ஒன்று உண்டு. அந்த மாளிகை ஜனாதிபதிக்கு தேவை இல்லை. இளைஞர்களின் தகவல் தொழில்நுட்ப கல்விக்காகவும், கணினி விஞ்ஞான கல்விக் காகவும், ஆங்கில மொழிக் கல்விக்காகவும், அறிவின் மத்திய நிலையமாக மாற்றி சர்வதேசதரத்திலானபயிற்சிகளை வழங்கும் மத்திய நிலையமாக பயன்படுத்துவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அனுராதபுர நகரில் நேற்று நடந்த தேர்தல் பரப்புரையில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்பொழுது ரணிலும் ☞ 9

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஒன்றுமில்லாதவர்களாக்கவேண்டும் என்பதற்காகவே மாவை சேனாதிராசா செயற்படுகின்றார் என்பது நேற்றுத் தெளிவானது.

நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் வேட்பாளர் அரியநேத்திரனை அவரது அலுவலகத்தில் சென்று சந்தித்த பின்னரும் தமிழ் அரசுக் கட்சியின் உயர் மட்டத்தினர் 6 பேர் கலந்துகொண்ட கூட்டத்திற்கும் மாவையர் சென்றிருந்தார். வெட்கம் இன்றி அந்தக் கூட்டத்திற்கும் அவர் செல்வாரா என்று நேற்று இந்தப் பத்தியில் கேள்வி எழுப்பியிருந்தேன். அவர் சென்றிருந்தார்.

வேடிக்கை என்னவென்றால் அந்தக் கூட்டத்தின் இறுதியில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது தொடர்பாக ஒரு அறிக்கையை கட்சி விடுத்தது. அந்த அறிக்கையை ஊடகவியலாளர்கள் முன்பாக மாவையரே வாசித்தார். இதெல்லாவற்றுக்கும் மேலாக, அந்த அறிக்கையை மாவையரே தன் கைப்படத் தயாரித்தும் இருந்தார். கட்சியின் மூத்த உபதலைவராக சிவஞானமும் அந்த அறிக்கையைத்தயாரிப்பதற்குமாவையருக்கு உதவியிருந்தார்.

மாவையர் தனது மேடைப் பேச்சு மாதிரியே 10 பக்கங்களுக்கு நீட்டி முழக்கியிருந்த அந்த அறிக்கையை 2 பக்கங்களுக்குரியதாகச் சுருக்குவதற்கு சிவஞானம் உதவியிருக்கிறார் என்பதைத் தவிர அந்த அறிக்கைமுழுக்கமுழுக்கமாவையராலேயே தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

அப்படி, சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதற்கான காரணத்தை விளக்கித் தானேஓர்அறிக்கையைத்தயாரித்து-, அதைக் கட்சியின் அறிக்கையாக செய்தியாளர்கள் முன்பும் தானே வாசித்துக் காட்டியும்விட்டு வவுனியாவில் இருந்து புறப்பட்ட மாவையர் வழியில், கிளிநொச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரனுக்கு ஆதரவாகக் கூட்டிய கூட்டத்திலும் கலந்துகொண்டார்.

கூட்டத்தில் கலந்துகொண்டது மட்டுமல்ல தமிழின விடுதலைக்கான - இலட்சியத்துக்கான பயணத்தில் அணி திரண்டுள்ளபெருந்தொகையானஉங்களைப் போன்று என்னுடைய வாக்கினையும் அளிப்பேன் என்று உறுதிப்பாட்டுடன் தெரிவிக்கின்றேன்என்றும்உரையாற்றினார். அதாவது அரியநேத்திரனுக்குத்தான் அவரது வாக்கு என்று மக்கள் எடுத்துக்கொள்ளும் வகையில் உரையாற்றினார்.

பின்னர் என்ன மண்ணாங்கட்டிக்கு சஜித்தை ஆதரித்து தமிழ் மக்களை வாக்களிக்கும்படிகேட்டுஅறிக்கையும்விட்டார்? மொத்தத்தில் தமிழ் மக்கள் யாருக்கும் வாக்களிக்களிப்பது என்று குழம்பி சிதறி வாக்களிக்க வேண்டும் என்பதுதான் அவரது தெளிவான திட்டம். அதற்காகத்தான் அவர் சஜித்தை ஆதரித்து தானே ஓர் அறிக்கை தயாரித்து வெளியிட்டதுடன், அரியநேத்திரனுக்குத்தான் எனது வாக்கு என்றுபொருள்படும்வகையில்கிளிநொச்சியில் உரையும் ஆற்றினார்.

இப்படி தமிழ் மக்களின் வாக்குகள் பலருக்கும் இடையில் பரவிச் சிதைந்தால் என்ன லாபம் கிடைக்கும்? அது ரணிலுக்கு இலாபமாக அமையும். தமிழ் மக்களின் வாக்குகள் சஜித்துக்குத் திரட்சியாகக் கிடைக்காமல் போனால் ரணிலுக்கு அது இலாபம். பொதுவேட்பாளருக்கும்கிடைக்காமல் போனால்தமிழ் அரசுக் கட்சிக்குள் மாவையர் தொடர்வதற்குச் சாதகமாக இருக்கும். அதனால் அவருக்கு இலாபம். அதேநேரம் சுமந்திரன் உள்ளிட்ட கட்சியின் மத்திய செயற்குழுவினருக்கும் மண்டையில் ஓங்கிக் குட்டியது போலவும் இருக்கும். இப்படி தெளிவாகக் கணக்குப்பண்ணித்தான் அவர் செயற்படுகின்றார் என்பது தெரிகின்றது.

இப்படித் சுயலாபத்துக்காகச் செயற்படும் ஒருவர்தமக்குத்தலைவராகவேண்டாம்என்று தெளிந்துதான் தமிழ் மக்கள் அவரை கடந்த தேர்தலிலேயே ரணில் விக்கிரமசிங்கவைப் போல தூக்கிக் கடாசிவிட்டார்கள். அதற்குப் பழிவாங்குவதும்ம் தமிழர்கள் பலம்மிக்க ஓர் அணியாக சஜித்தை ஆதரிப்பதன் மூலமோ அரியநேத்திரனை ஆதரிப்பதன் மூலமோ திரண்டுவிடாமல் பழிவாங்குவதும் மாவையரின் நோக்கமாக இருக்கும்போலும். அதற்காகத்தான் தமிழ் மக்களைக் குழப்போ குழப்பென்று குழப்புகின்றார்.

.....................

ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம் என்ற பெயரில் அநாமதேயமான ஒரு துண்டறிக்கை விடப்பட்டது குறித்து இந்தப் பத்தியில் ஏற்கனவே விளக்கியிருந்தது வாசகர்களுக்குநினைவிருக்கும். அந்தஅறிக்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குள் உள்ள எந்தவொரு தொழிற்சங்கத்தினதும் ஆதரவுடனும்தயாரிக்கப்பட்டிருக்கவில்லை, ஒரு சிலர் மட்டும் தயாரித்து பல்கலைக்கழகச் சமூகம் என்ற அநாமதேயப் பெயரில் வெளியிட்டார்கள் என்ற உண்மையையும் தெளிவுபடுத்தியிருந்தேன்.

இப்போது, பல்கலைக்கழகத்தில் உள்ள அறிஞர்களின் கருத்தாக ஓர் அறிக்கை இன்று வெளியாகும் என்று அறியமுடிகின்றது. ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ் மக்கள் அணுகவேண்டிய விதம் குறித்து தெளிவுபடுத்தும் வகையிலும், தமிழர் தரப்பில் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு இடம்பெறும் அனைத்துக் கூத்துக்களையும் கடுமையாக விமர்சித்தும் அந்த அறிக்கை இன்று வெளியாகும் என்று தெரிகிறது. பல்கலைக்கழகத்தில் உள்ள கருத்தொருமித்த பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் தாம் யார் என்பதை அடையாளப்படுத்தி இந்த அறிக்கையை வெளியிடுவதற்குத் தயாராகி வருகின்றார்கள் என்றும் அறியமுடிகின்றது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## தமிழருக்குத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்பது அல்ல. மாறாக எமது மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு பெறப்படவேண்டும் என்பதே நோக்கமாகும்.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்த பிரதான மூன்று வேட்பாளர்களில் ஒருவர்தான் வெற்றி பெறமுடியும். ஆனால் மற்றைய இருவரும்கூட அவர்கள் வெளிப்படையாக நாட்டுமக்களுக்குக் கூறியிருக்கும் நிலைப்பாட்டின்படி, வெற்றி பெறும் வேட்பாளர் எடுக்கும் முயற்சிக்கு எதிராகச் செயற்படமுடியாது. எனவே மூன்று பிரதான வேட்பாளர்களையும் அதிகாரப் பகிர்வு குறித்த வாக்குறுதியைக் கொடுக்க வைத்திருக்கிறோம். இது "எமது மக்களின் வாக்குகளை உங்களுக்குத் தருகிறோம். அதேபோன்று நீங்கள் எமது மக்களுக்குரிய தீர்வைத் தாருங்கள்'' என்ற பேரம் பேசுதலின் அடிப்படையில் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே மூவரில் எந்த வேட்பாளர் வென்றாலும், தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதை முன்னிறுத்திய நடவடிக்கைகளில் தமிழ் அரசுக் கட்சி தொடர்ந்து ஈடுபடும்.

அதேவேளை மேற்குறிப்பிட்ட பேரம் பேசுதலின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் உச்சபட்ச வாக்குறுதி அளித்த சஜித் பிரேமதாஸவுக்குஎமதுமக்களின்வாக்குகளை அளிப்பதாகக் கூறியிருக்கின்றோம். எனவே இவ்விடயத்தில் தமிழ் மக்களும் ஒத்துழைப்பு நல்கி சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்கவேண்டும் - என்றார்.

## தேசமாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களின் எழுச்சி நிகழ்வான நாளாகவும் தமிழனம் விடுதலை பெறதாத நிலையில் நடைபெறுகின்ற மற்றொரு ஜனாதிபதி தேர்தலாகவும் செப்டெம்பர் 21 தேர்தல் அமைகின்றது.

அவ்விதமான தேர்தலில் எமது விடுதலைக்கான இலட்சியப் பயணதுக்காக எங்களுடையவாக்குகளைபயன்படுத்துவோம் என்ற உறுதியோடு இந்த எழுச்சி நிகழ்வில் பங்கெடுத்துள்ளீர்கள்.

விடுதலைக்கான போராட்டத்தில் மக்களையும், போராளிகளையும் காவுகொடுத்துள்ளோம். அந்த வகையில் நாம் எமது பயணத்திலே உறுதியாக இருக்கின்றோம், அந்தப் பயணத்தினை வலுவானதாக மேற்கொள்ளவேண்டும்என்றஇலட்சியத்துடன் இருக்கும் உங்கள் முன்னிலையில் அந்த இலட்சியத்துக்காகஎன்னுடையவாக்கினையும் அளிப்பேன் என்ற உறுதிப்பாட்டுடன் வருகை தந்துள்ளேன்.

அதுமமட்டுமன்றி, நீங்கள் அனைவரும், தமிழர்களின் இட்சியத்துக்கான எழுச்சியை வெளிப்படுத்தும் வகையில் உங்கள் வாக்குகளைசெப்டெம்பர்21அளிக்கவேண்டும் என்றும் நான் வலியுறுத்துகின்றேன்.

கடந்த காலத்தில் எமது விடுதலைக்காக அர்ப்பணிக்கப்பட்ட உயிர்களை நெஞ்சில் நிறுத்தியவனாக, அதற்காகப்பயணிக்கும்எமது உயிர்களும் எப்போது வேண்டுமானாலும் போகலாம், பணயம்வைக்கப்படலாம்என்பதை நினைவுபடுத்தியவனாக, எதிர்கால எமது இலட்சியத்துக்கானபயணத்தில்அர்ப்பணிப்புச் செய்வதற்கு தயாராக உள்ள மக்களுக்கும் நன்றி உடையவனாக தேசமாக எழுச்சி அடைவோம். அதற்காக உழைப்போம் என்று உரைத்து விடைபெறுகின்றேன் என்றார்.

## ஜனாதிபதித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறி சிங்கள வேட்பாளர்களின் சுமையைக் குறைக்கப் பார்க்கின்றார்கள் என்று நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ்பொதுவேட்பாளர்அரியநேத்திரனை ஆதரித்துதொண்டமானாறுமணிமண்டபத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான் சிகிச்சைக்காகக் கொழும்பு செல்ல முன் எமது கட்சி ஒழுங்குபடுத்திய இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுவதை நான் ஒரு பாக்கியமாகக் கருதுகின்றேன். அதுவும் நண்பர் அரியநேத்திரன் இன்று எம்முடன் கலந்து கொள்வது மகிழ்வைத் தருகின்றது. நியமன நாள் அன்று சிற்பரனும் நானும் அவருடன் கூடஇருந்தோம். தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடும் நாளன்றும்கூட இருந்தோம். நான் சிகிச்சைக்காகச் செல்ல முன்னரும்அவருடன்எம்கட்சியால்ஒழுங்கு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் பங்கு பற்றுவது சாலச் சிறந்ததாகக் கருதுகின்றேன்.

அநேகமாக எனது இருதய சிகிச்சை தேர்தல் நாளன்றே நடைபெறும் என்று எண்ணுகின்றேன். எனினும் தேர்தலுக்கு முன்னைய கடைசி வாரத்தில் இந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்தமை எனது நற்பேறென்றே நினைக்கின்றேன். இம்முறை எமது தமிழ் பொது வேட்பாளருக்கு 6 இலட்சத்துக்கு மேல் எமது தமிழ்ப்பேசும் மக்கள் வாக்களிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

பதில்பொலிஸ்மாஅதிபர்அரியநேத்திரனுக்கு அனுப்பிய கடிதத்தில் அவருக்கு மக்கள் செல்வாக்கு அதிகரிக்கும் நிலையில் அவரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று கூறியுள்ளார். அத்துடன் சுமந்திரன், சாணக்கியன் ஆகியோரின் அதிருப்தி பற்றியும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாம்பழங்கள் அதிகம் காணப்படும் மரத்துக்குத்தான் கல்லடி விழும். மக்களின் செல்வாக்கு அரியநேத்திரனுக்கு அதிகரித்ததால்த்தான் பொறாமையும் பொறுப்பற்ற சிந்தனைகளும் சுமந்திரனையும் சாணக்கியனையும் பீடித்துள்ளன. ஆனால் அவர்களால்தமிழ்மக்களின்ஒற்றுமையையும் ஒருங்கிணைந்த செயற்பாட்டையும் சீர்குலைத்துவிட முடியாது.

இந்தத் தேர்தலுடன் வடக்கு கிழக்குத் தமிழ் மக்களின் வாழ்க்கையில் ஒரு புது அத்தியாயமே திறக்கப்படுகின்றது. நாம் இனித் தமிழர்களாகச் சிந்திக்கப் போகின்றோம். அரசுகள் சிங்கள பௌத்த சிந்தனையுடன் செயலாற்றும்போது பாதிக்கப்பட்ட நாங்கள் தமிழர்களாகச் சிந்திப்பதில் எந்தத் தவறும் இல்லை.

கட்சிகள் கடந்த செயற்பாட்டில் இறங்கியுள்ளோம். எனினும் எம்மிடையே மூன்று வித பிரிவுகள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. ஒன்றுதமிழ்ப்பொதுவேட்பாளரை ஆதரிக்கும். அவர்கள் தமிழ்த் தேசியம் சார்ந்த பிரிவினர்.

அடுத்தவர்சிங்களவேட்பாளர்ஒருவருடன் கூட்டு சேர வேண்டும், அவர் தருவதை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்துடையவர்கள். அவர்கள் சுயநல சிந்தனை உடையவர்கள். பெரும்பான்மை இன வேட்பாளர் ஒருவருக்கு தாளம் போட்டு தமக்குக் கிடைப்பதைச் சுருட்டிச் செல்ல முனைபவர்கள்.

மூன்றாவதுபிரிவினர்பகிஷ்கரிப்பாளர்கள். இவர்கள் வெட்கத்திற்குரியவர்கள். இதுவரை சிங்கள வேட்பாளரைப் பகிஷ்கரிப்போம் என்று கூறி வந்தவர்கள் இப்பொழுது தமிழ் வேட்பாளரையும் பகிஷ்கரிக்கச் சொல்கின்றார்கள். இதில் ஒரு சூட்சுமம் உண்டு. தேர்தலைப்புறக்கணித்தால்யாருக்கு இலாபம்? சிங்கள வேட்பாளர்களுக்கே அது இலாபம். ஏன் என்றால் தமிழ் மக்களின் வாக்குகள் போடப்படாவிட்டால் அளிக்கப்பட்ட வாக்குகளின் மொத்தத் தொகை குறையும். ஆகவேதேர்தலில்வாக்களித்தவர்களில்ஐம்பது சதவிகிதமும் ஒன்றும் வெற்றியாளர் பெற வேண்டும்என்றவிதிக்குஉரம்ஏற்றுவதாகவே இவர்களின் பகிஷ்கரிப்பு அமையும். நாட்டில் ஒரு கோடிப் பேர் வாக்களித்தார்கள் எனில் வெற்றிஅடைபவர்50இலட்சத்துஒருவாக்கைப் பெறவேண்டும். பகிஷ்கரிப்பாளர்கள் இரண்டு இலட்சம் பேரை வாக்களிக்காமல் தடை செய்துவிட்டார்களானால் 98 இலட்சம் பேரே வாக்களித்தனர் என்று கூறி 49 இலட்சத்து ஒரு வாக்கைப் பெற்றவரே வெற்றியாளர் என்று அடையாளப்படுத்தப்படுவார். ஆகவே பகிஷ்கரிப்பாளர்களுக்கும் சிங்கள வேட்பாளர்களுக்கும் இடையில் நிச்சயமாக ஒரு உடன்பாடு இருந்தே ஆக வேண்டும்.

இந்தப் பகிஷ்கரிக்கும் கட்சியினரின் மூலக்கட்சி கூட ஒற்றையாட்சியையே வலியுறுத்துகின்றது. இப்பொழுது தேர்தலைப் பகிஷ்கரிப்போம் என்று கூறி சிங்கள வேட்பாளர்களின்சுமையைக்குறைக்கப்பார்க்கின்றார்கள். இந்தப் பகிஷ்கரிப்பு கோரிக்கையினால் இப்பொழுது பகிஷ்கரிப்பாளர்கள் நிர்வாணமாக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் உண்மை வடிவத்தை உலகம் அறியத் தொடங்கியுள்ளது. ஆகவே பகிஷ்கரிப்பாளர்கள் தயவு செய்து தமிழ் பொது வேட்பாளருக்கு அவர்களின் ஆதரவாளர்கள் வாக்களிக்க வேண்டும்என்றுவெளிப்படையாவேஒருஅறை கூவல் விடுக்க வேண்டும். இல்லையெனில் இதுவரை காலமும் இளைஞர்கள் மத்தியில் இந்தப்பகிஷ்கரிப்பாளர்கள்பெற்றுவந்தஆதரவு இனி இல்லாமல் போய்விடும். அவர்கள் யாவரும் எமது மணிவண்ணன் பின்னால் வீறு நடை போட ஆரம்பித்துவிடுவார்கள்.

எமது கட்சியின் முக்கிய இளவலாக மணிவண்ணன் அவர்கள் சாதனை படைத்து வருகின்றார். பகிஷ்கரிப்பாளர்கள் கட்சியில் இருக்கும் இளைஞர்கள் அனைவரும் இனி மணிவண்ணனுடன் கைகோர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். அரியநேத்திரனைநாங்கள்முன்னிறுத்தியதால் சிங்கள வேட்பாளர்களின் சுமையைக் கூட்டியுள்ளோம். அரியநேத்திரனுக்கு 10 இலட்சம் வாக்குகள் கிடைத்தால் அளிக்கட்ட வாக்குகளின் தொகை 10 இலட்சத்தால் அதிகரிக்கும். முன்னர் 100 இலட்சமே மொத்த வாக்களார் தொகை என்றிருக்க இவரின் 10 இலட்சத்துடன் சேர்ந்து மொத்த வாக்குகளின் தொகை நூற்றிப் பத்து இலட்சமாகக்கூடும். எனவே வெற்றி பெறும் சிங்கள வேட்பாளர் 55 இலட்சத்து 1 வாக்குகளைப் பெற்றால்த்தான் வெற்றி பெறலாம். அரியநேத்திரன் அவர்களுக்கு எத்தனைவாக்குகள் அளிக்கின்றோமோ அதே அளவுக்கு வேட்பாளர் ஒருவர் வெற்றி பெறக் கூடிய வாக்குகளைப் பெற வேண்டிவரும்.

கோட்டாபய அவர்கள் உயிர்த்த ஞாயிறின் மூலமாக சிறுபான்மையர் வாக்குகள் இல்லாமல், தான், வெற்றி பெற முடியும் என்று காட்டினார். ஆனால் இம்முறை தமிழ் வாக்குகளைப்பெறதெற்கத்திய வேட்பாளர்கள் அடிக்கடி இங்கு வந்து சென்று கொண்டு இருக்கின்றார்கள். விருப்பு வாக்கேனும் தமக்குக் கிடைக்காதா என்ற நப்பாசையில் இங்கு வந்து கொண்டிருக்கின்றார்கள். எம் தமிழ் மக்கள் சங்குக்கு முன் புள்ளடி போட்டு நிறுத்திக் கொள்வதே சாலச் சிறந்தது. நடைமுறையில்விருப்புவாக்குகளைஅளிப்பது சரியாக நடைபெறாவிட்டால் குறித்த வாக்கு பலமற்றதாக்கப்படும். விருப்பு வாக்குகளை அளிக்கப்போய்சங்குக்குக்கொடுக்கும்உங்கள் வாக்கை பலமற்ற வாக்காக மாற்றாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

ஆகவே தமிழ் மக்கள் தமிழ் பொது வேட்பாளருக்கு மட்டும் புள்ளடி இட்டு அதாவது சங்குச் சின்னத்திற்குப் புள்ளடி இட்டு நிறுத்திக் கொள்வதே தமிழ்த் தேசியத்திற்கு உகந்த செயலாகும். அரியநேத்திரனுக்கு எங்கள் வாக்குகள் சென்றடைவதை நாம் உறுதிப்படுத்த வேண்டும்.

சிலர் அரியநேத்திரனுக்கு நாம் வாக்களித்தால் சிங்கள வேட்பாளர்களை ஆத்திரமடையச் செய்து விடுவோம் என்று கூறுகின்றார்கள். அவர்கள் ஆத்திரம் அடைந்து ஏதாவது செய்தால் அது எமக்கே நன்மையைத்தரும். தமிழ் மக்களை சுயமாகச் சிந்தித்து செயலாற்றவிடாமல்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# ஆறுமுக நாவலர் கலாசார மண்டபத்தை வாக்குச்சாவடியாக பயன்படுத்தாதீர்கள்

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை தேர்தல்கள் ஆணைக்குழு தலைவருக்குக் கடிதம்

ஆறுமுகநாவலர் கலாசார மண்டபத்தை வாக்குச்சாவடியாக பயன்படுத்துவது அதன் புனிதத்தன்மையையும் நடைமுறைகளையும் பாதிக்கக்கூடும் என்பதால் அம்மண்டபத்தை வாக்குச்சாவடியாக பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவர் மற்றும் செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்கவிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுகுறித்துஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர்சபையின் தலைவர் சின்னத்துரை தனபாலா மற்றும் செயலாளர் கலாநிதி கி.பிரதாபன் ஆகியோரால் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது -

இலங்கையின் தேசிய வீரர்களுள் ஒருவராகப் போற்றப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பிறந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கலாசார மண்டபம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையின் கோரிக்கைக்கு அமைவாக 1972ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு 1985 இல் கட்டட நிர்மாண வேலைகள் பூர்த்தியான போதிலும், நீண்டகாலமாக யாழ்ப்பாண மாநகரசபையின் பராமரிப்பில் இருந்துவந்தது.

ஆறுமுகநாவலர் கலாசார மண்டபம் அமைக்கப்பட்டதன் நோக்கம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்பெருமானைஎன்றும்நினைவில்கொள்ளும் வகையிலும் ஓர் ஆன்மிக மையமாக அவர்தம் கொள்கைகளைப் பேணும் நினைவாலயமாக விளங்குவதன் பொருட்டுமாகும். நாவலர் கலாசார மண்டபம் என்ற பெயரைக் கொண்டிருந்தாலும் சைவசமய ஆசார அனுட்டானங்களைப் பேணும் ஆன்மிக நிலையமே இக்கலாசார மண்டபமாகும்.

பொது செயற்பாடுகளுக்கும் பொது சேவைகளுக்கும் இந்த மண்டபம் கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்டுவந்த போதிலும் அதன்புனிதத்தன்மையைபேணவேண்டும்என்ற விடயம் கருத்திற்கொள்ளப்படவில்லை. நாவலர் கலாசார மண்டபம் உருவாக்கப்பட்டதற்கானநோக்கம், அங்கு புனிதத்தன்மைபேணப்படவேண்டியதன் அவசியம், அம்மண்டபத்தை ஆன்மிக நிலையமாகப் போற்றவேண்டியதன் தேவைப்பாடு மற்றும் அங்கு ஆசாரங்கள்பின்பற்றப்படவேண்டியதன் முக்கியத்துவம்உள்ளிட்ட இன்னோரன்ன காரணங்களால்கடந்தகாலக் கோரிக்கைகளுக்கு அமைவாக 2022ஆம் ஆண்டு முதல் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஊடாக இந்த மண்டபத்தின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் இம்மண்டபத்தையும் வாக்குச்சாவடியாகப் பயன்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள நிலையில், அது அதன் புனிதத்தன்மையையும், நடைமுறைகளையும் பாதிக்கக்கூடும் என்பதால், தயவுசெய்து இந்த மண்டபத்தை வாக்குச்சாவடியாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (05)

# வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரித்து திருகோணமலையில் பொதுக்கூட்டம்

தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரித்து திருகோணமலை வெலிக்கடை தியாகிகள் அரங்கு கடற்கரை பகுதியில் சனிக்கிழமை பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அரசியல் ஆய்வாளர் ஆ.யதீந்திரா தலைமையில் நடைபெற்ற இந்த தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரனுக்கு மக்கள் அமோக வரவேற்பளித்தனர்.

இந்த தேர்தல் பரப்புரை கூட்டத்தில் பெருமளவு பொது மக்கள் கலந்துகொண்டார்கள்.(05)

# நிலத்தகராறு காரணமாக கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் இறப்பு

பதுரலிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹீன்பல்வில பிரதேசத்தில் நிலத்தகராறு ஏற்பட்டு கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

அத்வெல்தொட்ட, மொரபிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 70 வயதுடைய நபரே இத்தாக்குதலில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்கப்பட்ட நபர் படுகாயமடைந்த நிலையில் பதுரலிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதே உயிரிழந்துள்ளார்.

மேலும், சடலம் பதுரலிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

தாக்கிய சந்தேக நபரை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை பதுரலிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# அம்பன் ஆற்றின் நீர்மட்டம் உயர்ந்ததால் நீர் இழுத்துச் சென்ற இரு பெண்கள் மீட்பு

நாவுல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போவதென்ன நீர்த்தேக்கத்தில் வான்கதவு திறக்கப்பட்டதன் காரணமாக அம்பன் ஆற்றின் நீர்மட்டம் உயர்ந்துள்ள நிலையில், மொரகொல்ல பிரதேசத்தில் நீராடிக்கொண்டிருந்த இரு பெண்கள் நீரில் அடித்துச்செல்லப்பட்டு, பின்னர் மீட்கப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

நீரில் அடித்துச்செல்லப்பட்ட இரு பெண்களும் கொங்கஹவெல மற்றும் காகம பிரதேசங்களை சேர்ந்த 20, 25 வயதுகளை உடையவர்களாவர்.

நீரில் அடித்துச்செல்லப்பட்ட இரு பெண்களும் தம்புள்ளை பொலிஸ் உயிர்காப்புப்படையினரின் கடும் முயற்சியால் மீட்கப்பட்டு, முதலுதவி வழங்கப்பட்டு பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.(05)

# ஹாலிஎல தனியார் காணியில் கைக்குண்டு கண்டெடுப்பு



ஹாலிஎல பகுதியில் தனியார் காணியொன்றில் இருந்து கைக்குண்டு கண்டெடுக்கப்பட்டுள்ளதாக ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.

ஹாலிஎல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனாகன்னிய சம்போதி விகாரைக்கு அருகில் தனியார் வீடொன்றுக்கு அருகிலேயே இந்த எஸ்.எவ்.ஜி. ரக கைக்குண்டு காணப்பட்டுள்ளது.

இந்த கைக்குண்டை எவரேனும் அவ்விடத்தில் கொண்டுவந்து போட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்த கைக்குண்டு சம்பந்தமான அறிக்கையொன்றை பதுளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளதாகவும் கைகுண்டை செயலிழக்க வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகவும் ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# வேட்பாளர் கையேட்டை பெற மறுத்த இளைஞன் மீது நாவலப்பிட்டியில் தாக்கு

நாவலப்பிட்டி பிரதேசத்தில் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவளிக்கும் வகையில் பகிர்ந்தளிக்கப்பட்ட வேட்பாளர் கையேட்டை பெற்றுக்கொள்ள மறுத்த இளைஞன் ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரின் ஆதரவாளர்கள் சிலர் நாவலப்பிட்டி பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையமொன்றுக்குள் சென்று அங்கிருந்த இளைஞன் ஒருவனுக்கு வேட்பாளர் கையேட்டை கொடுத்துள்ளனர்.

இதன்போது இளைஞன் அந்த கையேட்டை பெற்றுக்கொள்ள மறுத்துள்ளார். பின்னர், அந்த ஆதரவாளர்கள் இளைஞனை பலமாக தாக்கியுள்ளனர்.

இதனையடுத்து, காயமடைந்த இளைஞன் நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இளைஞனை தாக்கும் காட்சிகள் அனைத்தும் அவ்வர்த்தக நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி கமராவில் பதிவாகியுள்ளன.

பாதிக்கப்பட்ட இளைஞன் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் நேற்று (திங்கட்கிழமை) முறைப்பாடு அளித்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(05)

# தேரர் குருணாகலில் கைது

செல்லுபடியற்ற சாரதி அனுமதிப் பத்திரத்துடன் காரை செலுத்திச்சென்ற குற்றச்சாட்டில் தேரர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என குருணாகல் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் மீரிகமவில் உள்ள விகாரை ஒன்றில் வசிக்கும் 46 வயதான தேரர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் கண்டியில் இருந்து குளியாப்பிட்டிய கந்தானேகெதர பிரதேசத்தில் உள்ள விகாரையொன்றை நோக்கி காரில் பயணித்துக்கொண்டிருக்கும்போது குருணாகல் போக்குவரத்து பொலிஸாரால் சோதனைக்கு உட்படுத் தப்பட்டுள்ளார்.

இதன்போது தேரர் காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரத்தை வைத்திருந்தமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, தேரர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் குருணாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# பல்லேகல சிறைச்சாலையிலிருந்து கைதி ஒருவர் தப்பியோட்டம்!

பல்லேகல திறந்தவெளி சிறைச்சாலையில் கடந்த 11 ஆண்டு காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளதாக பல்லேகல பொலிஸார் தெரிவித்தனர்.

பொறளை, பேஸ்லைன் வீதி பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய கைதியே தப்பிச் சென்றுள்ளார்.

இந்த கைதி சிறைச்சாலையின் பணிகளில் ஈடுபட்டிருந்தபோது மிகவும் சூட்சுமமான முறையில் சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பிச்சென்ற கைதி போதைப்பொருளுக்கு அடிமையானவர் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பல்லேகல பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அமைதியான தேர்தலே தேவை

**2024 அரசுத் தலைவர் தேர்தலுக்கான பரப்புரைகள் அனைத்தும் நாளை புதன்கிழமை நள்ளிரவுடன் முடிவுக்கு வருகின்றன. கடந்த ஒரு மாத காலமாக வேட்பாளர்கள் அனைவரும் அனல் பறக்கும் பரப்புரைகளில் ஈடுபட்டிருந்தனர். ஒருவரை ஒருவர் கழித்துக் குதறாத குறையாகக் குற்றச்சாட்டுக்களை அடுக்கியிருந்தனர். வாக்குறுதி மழையாகப் பொழிந்திருந்தனர். வெற்றி தமக்கு மட்டுமே என்று முக்கமிட்டிருந்தனர்.**

**அவர்களின் இந்தச் சண்டப்பிரசண்டங்களை எல்லாம் கேட்ட பின்னர் வியாழன் மற்றும் வெள்ளி ஆகிய இரண்டு நாள்களும் மக்கள் நன்கு ஆறஅமர இருந்து சிந்தித்து தாம் யாருக்கு வாக்களிப்பது என்பதைத் தீர்மானிப்பதற்காகவே வாக்களிப்புக்கு முன்பான இரண்டு நாள்களும் பரப்புரைகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் தாம் செய்த மூளைச் சலவையில் இருந்து மக்கள் வெளியே வந்துவிடக்கூடாது என்ற காரணத்தால் எந்த வழியிலாவது மக்களைத் தொடர்ந்து மூளைச் சலவை செய்வதில் வேட்பாளர்கள் குறியாக இருப்பார்கள். அதுபோன்ற தருணங்களில் முகப் புத்தகம் மற்றும் புலனம் (வட்ஸ்அப்) போன்ற சமூக ஊடகங்கள் அதிகம் பங்களிப்பு வழங்கும் என்றும் அதன் ஊடாக எழக்கூடிய கருத்துமோதல்கள் தேர்தல் வன்முறைகளுக்கு வழிவகுக்கக்கூடும் என்கிற அச்சமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.**

**கடந்த தேர்தல்களைவிட இந்தத் தடவை சமூக ஊடகங்களில் பொய்ப் பரப்புரைகளும் வெறுப்பூட்டும் பரப்புரைகளும் அதிகம் இடம்பெறுகின்றன என்று தேர்தல் கண்காணிப்பு உள்ளூர் அமைப்புக்களான பவ்ரல், கஃபே போன்றவை ஏற்கனவே எடுத்துக்காட்டியிருக்கின்றன. இந்த நிலையில் எத்தகையஅவசரநிலையையும்எதிர்கொள்வதற்கான திட்டத்தை காவல்துறையினரும் முப்படையினரும் சேர்ந்து தயாரிப்பதற்கான அனுமதியை அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தந்துள்ளார் என்கிற செய்திகளும் வெளியாகி உள்ளன.**

**ஒருபுறம்வன்முறைகுறித்தஅச்சம்மறுபுறம்அதனை எதிர்கொள்வதற்கான அரச தயார்ப்படுத்தல்கள் குறித்த செய்தி என்று தேர்தல் வாக்களிப்பு மற்றும் வாக்குஎண்ணிக்கையைச்சுற்றியஅச்சுறுத்தல்கள் தீவிரமாகியிருக்கின்றன. இத்தகையதொரு அச்சம் வாக்களிக்கவருபவர்களின்எண்ணிக்கையில்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். வன்முறை அச்சம் காரணமாகப் பலரும் வாக்களிப்பு நிலையங்களுக்கு வருவதைத் தவிர்க்கக்கூடும்.**

**போட்டியிடும் எந்தவொரு வேட்பாளரும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறமுடியாது என்று கருத்துக்கணிப்புக்கள் கூறுகின்ற வேளையில் வாக்களிப்போரின் எண்ணிக்கை குறைவது தேர்தல் முடிவுகளில் பாராதூரமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால், வன்முறை குறித்த அச்சம் முற்றிலுமாக நீக்கப்பட்டு, மக்கள் அமைதியாகவும் சுதந்திரமாகவும் வாக்களிப்பதற்கான சூலை உறுதிப்படுத்தவேண்டியது கட்டாயம். தேர்தல் ஆணைக்குழு இநந்த விடயத்தில் கவனமாகவும் தெளிவாகவும் நடந்துகொள்ளவேண்டும். தேர்தல் அமைதியாக அழுத்தம் இன்றி நடப்பதை உறுதிப்படுத்தவேண்டும்.**

# ரணிலை தோற்கடிக்க இங்கு எவருமில்லை

## சமன் ரத்னபிரிய தெரிவிப்பு

இந்தத் தேர்தலில் ரணிலைத் தோற்கடிக்க எவரும் இல்லை என்று ஜனாதிபதியின் தொழில் உறவுகள் ஆணையாளர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற செய்தி யாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக் கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்படும் என்றும் இதனால் நாடு உறுதியற்ற நிலை ஏற்டும் என்ற அச்சத்தில் நாட்டில் இருக்கும் முதலீட்டாளர்கள் பலர் நாட்டைவிட்டு செல்ல தீர்மானித்திருப்பதாகவும் அதேபோன்று நாட்டில் இருக்கும் பெரும் வியாபாரிகள் வெளிநாடுகளுக்கு சென்றுதங்குவதற்கு ஹோட்டல்களில் அறைகளுக்கு முன்பதிவு செய்திருப்பதாகவும் புளும் வேர்ட் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி வெற்றிபெற்றால் இந்த நிலையே ஏற்படும் என்ற அச்சம் இருக்கிறது. தேசிய மக்கள் சக்தியின் வெளிப்படையான நிலைமையை அறிந்தே இவ்வாறு செய்திகள் வெளியிடப்படுகின்றன.

மக்கள் விடுதலை முன்னணியின் வரலாறு இந்த நாட்டு மக்களுக்கு தெரியும். அதனால் செப்டெம்பர் 21 அவ்வாறான மாற்றம் ஏதும் ஏற்படப்போவதில்லை. ரணில் விக்ரமசிங்கவே வெற்றிபெறப்போகிறார். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களுக்கு எவ்வாறு மக்களை அழைத்து வருகிறார்கள் என்பது தற்போது வெளிப்பட்டிருக்கிறது. கிராமங்களில் இருக்கும் அவர்களின் ஆதரவாளர்களை நாட்டில் இடம்பெறும் பிரதான கூட்டங்களுக்கு பஸ்களில் அழைத்து செல்கின்றனர்.

அதேநேரம் மிகவும்சிறியநிலப்பரப்பில்அவர்கள் கூட்டங்களை ஏற்பாடு, செய்து பெருமளவில் மக்கள் கலந்துகொண்டிருப்பதுபோல் காட்டுகிறார்கள்.

அத்துடன் இவர்களின் தேர்தல் பரப்புரை தற்போது தோல்வி கண்டு வருகிறது. இவர்களுக்கு இருந்துவந்தஆதரவுகுறைவடையஆரம்பித்துள்ளது. அதனால் தற்போது இவர்கள் மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கையை தொடங்கியுள்ளனர். இவர்கள் ஒருபோதும் அடக்குமுறை கலாசாரத்தை கைவிடுவதில்லை.

அதேநேரம் ரணில் விக்ரமசிங்கவை தோற்கடிப்பதற்கு சஜித் பிரேமதாசவுக்கும் பசில் ராஜபக்சவுக்கும் இடையிலான அரசியல் 'டீல்' வெளிப்பட்டுள்ளது.

பொது ஜன பெரமுன நாமல் ராஜபக்சவை போட்டியிடவைக்கஇறுதிநேரத்திலேயேதீர்மானித்தது. ஏனெனில், ரணில் விக்ரமசிங்க வெற்றிபெற்றால். எதிர்காலத்தில் நாமல் ராஜபக்சவுக்கு அதிகாரத்துக்கு வரமுடியாது என்பது அவர்களுக்கு தெரியும்.அதனால். சஜித் பிரேமதாசவுக்கு இந்த தேர்தலில் அதிக வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதற்காகவே நாமல் ராஜபக்சவை போட்டியிடவைக்கத் தீர்மானித்தனர்.

என்றாலும் இந்தத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில்ரணில்விக்ரமசிங்கவைதோற்கடிக்க முடியுமான ஒரு வேட்பாளரும் இல்லை. ரணில் விக்ரமசிங்கவின் வெற்றி நிச்சயமாகும் என்றார்.

# எத்தனை கூட்டம் நடத்தினாலும் ரணிலால் வெல்லவே முடியாது

## கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் திட்டவட்டம்

சுயேச்சைவேட்பாளர்ரணில்விக்கிரமசிங்கவின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நாடு முழுவதும் இடம்பெறுகிறது. எத்தனை கூட்டங்களை நடத்தினாலும் ரணில் விக்கிரமசிங்கவால் வெற்றிப் பெற முடியாது என்று கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

மொனராகலையில் நேற்று இடம்பெற்ற சர்வ ஜன சக்தியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2019 ஜனாதிபதித் தேர்தல், 2020 பொதுத்தேர்தல் ஊடாக நாட்டு மக்கள் ரணில் விக்கிரமசிங்கவை முழுமையாகப் புறக்கணித்தார்கள்.

தேசியத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் மக்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒருபோதும் ஆதரவளிக்கமாட்டார்கள். பதவியை எவ்வழி யிலாவது பெற்றுக்கொள்ள நாட்டுக்கு எதிரான அரசியலமைப்ஷை இயற்ற அவர் முயற்சிக்கிறார்.

தேசியவளங்களைத்தனியார்நிறுவனங்களுக்கு விற்பது அவரது பிரதான பொருளாதாரக் கொள்கை. இதனை தவிர்த்து தேசியத்துக்கு இணக்கமான எவ்வித திட்டங்களும் அவரிடம் கிடையாது. ஆகவே ரணில் விக்கிரமசிங்கவிடம் தேசியத்தை எதிர்பார்க்க முடியாது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு இணையாகவுள்ள அனுரகுமார திஸாநாயக்க இந்த நாட்டில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கக்கூடாது என்று குறிப்பிடுகிறார்.

பௌத்த சாசனம் பாதுகாக்கப்பட்டால் மாத்திரமே எமது இனம் பாதுகாக்கப்படும். ஆகவே எதிர்கால தலைமுறையினருக்காக பௌத்த சாசனத்தை அரச அதிகாரத்துடன் பாதுகாக்க வேண்டும்.

சஜித் பிரேமதாசவை பற்றிப் பேசி பயனில்லை. அரசியலுக்காக வருபவர்கள் அனைவரையும் தன்னோடு இணைத்துக் கொள்கிறார். எவ்வித கொள்கையும் கிடையாது.

வில்பத்து வனத்தை அழித்த அரசியல்வாதியும், அந்த அரசியல்வாதிக்கு எதிராக முறைப்பாடு செய்த பௌத்த தேரரும் சஜித் அணியில்தான் உள்ளார்கள். இவ்வாறு அடிப்படை கொள்கையில்லாதவர் எவ்வாறு நாட்டை நிர்வகிப்பார்? சிங்கள பௌத்தத்தைப் பாதுகாப்பார்?

தேசியத்துக்கும், பௌத்த முன்னுரிமை கொடுக்கும் சிறந்த தலைவரை வேட்பாளரை நாங் கள் களமிறக்கியுள்ளோம். நட்சத்திரம் சின்னத் துக்கு வாக்களித்து தேசியத்தை பாதுகாக்கும் பொறுப்பில் ஒட்டுமொத்த பங்காளர்களாக வேண்டும் - என்றார்.

# சஜித்தின் வெற்றிப் பயணத்தில் இணைக!

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. அழைப்பு

சஜித் பிரேமதாசவின் வெற்றி பயணத்தில் இணையுமாறு மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் வெற்றி பெற மாட்டார். எனவேதான் பொது ஜன பெரமுனவின் உறுப்பினர்கள் பலரும் அமைதியைப் பேணுகின்றனர். ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தேர்தல் பரப்புரை மேடைகளில் காணக்கூடியதாக இல்லை. யானை சின்னத்தில் வெற்றி பெற முடியாது என்பதற்காகவே அவர் எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுகின்றார்.

ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்கள் எவரேனும் அவருக்குவாக்களிப்பதற்குதீர்மானித்திருந்தால், அந்த முடிவை மாற்றிக்கொண்டு சஜித் பிரேமதாசவுக்கு வாக்களிக்கவேண்டும். 100 இலட்சம் வாக்குகளைப் பெற்று ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவார் என ஐ.தே.கவின் காலி மாவட்ட தலைவர் வஜிர அபேவர்தன தெரிவித்தார். அவ்வாறெனில் ஏன் அவர்களுக்கு எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தலுக்கான வேட்புமனுவைத் தாக்க செய்ய முடியாமல் போனது?

எமது வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சகல இன மக்களின் வாக்குகளாலும் வெற்றி பெறக்கூடிய தலைவராக சஜித் காணப்படுகின்றார். சிறுபான்மை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் அனைவரும் எம்முடனேயே இருக்கின்றனர்.

செப்டெம்பர் 18 மருதானையில் இடம்பெறவுள்ள இறுதி தேர்தல் பரப்புரைக் கூட்டமானது சஜித் பிரேமதாசவின் வெற்றிக் கூட்டமாகவே அமையும். கொள்கை அரசியல் செய்வதாகக் கூறியவர்கள் இன்று வாக்குறுதி அரசியல் செய்து கொண்டிருக்கின்றனர். எனவே அவ்வாறானவர்களின் வாக்குறுதிகளுக்கு ஏமாற்றமடையாமல் சஜித் பிரேமதாசவின் வெற்றி பயணத்தில் இணையுமாறு மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# வீதியில் நிலத்தடி மின் கம்பிகளை துண்டித்த சந்தேகநபர் கைது

**மீலாத் வாழ்த்து செய்தியில் கலீலுர்ரஹ்மான்**

கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக வீதியில் நிலத்தடி மின் கம்பிகளை துண்டித்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களனி வனவாசல பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

அதிவேக வீதியில் இரவுநேர சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் சுற்றுலா பிரிவினால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 14 அடி நீளமுள்ள 02 மின் கம்பிகள் மற்றும் மின் கம்பிகளை துண்டிப்பதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக வத்தளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகபொலிஸார்தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

(05)



# அடுத்த மாதம் புதிய இ-கடவுச்சீட்டு அறிமுகம்

*புதிய இ-கடவுச்சீட்டை வழங்கும் பணி அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை ஆரம்பிக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.*

*அதன் முதற்கட்டமாக, சிப் அட்டைகள் இல்லாத வெளிநாட்டு கடவுச்சீட்டுகளை அமைச்சகம் வழங்கும்.*

*புதிய வெளிநாட்டு கடவுச்சீட்டை உருவாக்குவதற்கான அனுமதியை பெறுவதற்கு குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டு ஆணையாளர் போலந்துக்குச் சென்றுள்ளார். (05)*

# அநுரவிடம் நாட்டை கொடுத்தால் அது இருளினுள்ளே மூள்கிவிடும்

**இராஜாங்க அமைச்சர் சுரேன் தெரிவிப்பு**

நாட்டை அநுரவுக்கு கொடுத்தால் நாளை நாடு இருளில் மூழ்கும் என்று இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

கந்தளாய் தொடருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று நடைபெற்ற 'ரணிலால் இயலும்' வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல்கலைக்கழகங்களில்பகிடிவதைகலாசாரத்தை ஜே.வி.பி சார்ந்த குழுக்கள்தான் முன்னெடுத்தன. ஆனால் தற்பொழுது 95 வீதமான பகிடிவதைகளை நிறுத்தியுள்ளோம்.

செப்டம்பர் 22 காலை கிழக்கில் சூரியன் உதிக்கும் போது நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க தெரிவாகியிருப்பார். ஹாவட் பல்கலைக்கழக நண்பர் ஒருவர்சிலநாட்களுக்குமுன்னர்என்னுடன்பேசினார். ஜனாதிபதி முன்னெடுக்கும் திட்டம் முன்மாதிரியானது. ஆபிரிக்காவில் வீழ்ச்சியடைந்துள்ள நாடுகளை மீட்க அவரை அனுப்ப முடியுமா என்று கேட்டார்.

பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு இன்று என்ன நிலைமை ஏற்பட்டுள்ளது. நாட்டை எரித்த திசாநாயக்க போன்றவர்கள் அன்றி ரணில் போன்ற விக்ரமசிங்கவினர் தான் தேவை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல இடங்களுக்குச் சென்றேன். மூடியிருந்தகடைகளைதிறக்கவும்ஓரமாக வைத்திருந்த மோட்டார் சைக்கிள்களுக்கு பெற்றோல் அடிக்கவும் கல்வி கற்பதற்கு மின்சாரம் பெற்றுத் தரவும் எடுத்த நடவடிக்கைக்காக ஜனாதிபதிக்கு வாக்களிப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

நாடு எதிர்பார்ப்பின்றி இருந்தபோது தனது வீடு தீவைக்கப்பட்டும், அச்சமின்றி முன்வந்து நாட்டைக் காத்த தலைவரை ஜனாதிபதியாக்க மக்கள் தயாராக உள்ளனர்.

அரசபல்கலைக்கழகமொன்றினால்சுயாதீனமாக மேற்கொண்ட கருத்துக் கணிப்பில் ஜனாதிபதி 54 வீத வாக்குகளினால் வெற்றியீட்டுவார் என்ற முடிவு வெளியாகியுள்ளது. ஆரம்பத்தில் சந்தேகம் இருந்தாலும், கடந்த 3 வாரத்தில் அந்த நிலைமை மாறியது.

ஜனாதிபதி உண்மையை மட்டுமே பேசுகிறார். அதனைக் கேட்டு மக்கள் அவருடன் கைகோர்த்துள்ளனர். ஜனாஸா விவகாரத்தில் ஆளும்தரப்பு என்ற வகையில் முஸ்லிங்களிடம் வெளிப்படையாக மன்னிப்பு கோரினார். அந்த விவகாரத்தில் தவறு நடந்திருந்தது என்றார்.

# மோ.சைக்கிள் பந்தயத்தில் ஈடுபட்ட 12 பேர் கைதாகினர்

கெஸ்பேவ – ஜாலியகொடை பிரதேசத்தில் சமூக ஊடகம் ஊடாக ஒருங்கிணைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பிலியந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பின் போது, 18 மோட்டார் சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, ஆறு சந்தேக நபர்கள் தங்களது மோட்டார் சைக்கிள்களை விட்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பிலியந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)



# சங்குக்கு மட்டுமே வாக்களியுங்கள்

## அரியநேத்திரன் திருமலையில் கோரிக்கை

சங்குசின்னத்துக்குமாத்திரம்வாக்களியுங்கள். ஏனையவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம். இன்னும் சில நாட்களில் பொய் வதந்திகள் வரலாம். அதனை நம்பி ஏமாற வேண்டாம்.என்று தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

திருகோணமலை வெலிக்கடை தியாகிகள் கடற்கரை அருகில் நடைபெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

நான்ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது ரணில், அநுர, சஜித் போன்றவர்களின் ஆசனத்தை பெறுவதற்கல்ல. சமஷ்டி தீர்வு கோரியும் 75 வருட கால பிரச்சினைக்கான தீர்வுகளை முன்வைத்துமே ஆகும்.

திருகோணமலை மண்ணுக்கு பலவரலாறுகள் உண்டு. இலங்கைக்கு சுதந்திர தினத்தன்று சிங்கக் கொடிக்கு பதிலாக கறுப்புக்கொடி ஏற்றிய 22 வயது இளைஞன் நடராசா சுட்டுக் கொல்லப்பட்டார்.

1956இல் இலங்கை தமிழ் அரசு கட்சியின் மாநாடு தந்தை செல்வாவினால் இங்கு தான் நடாத்தப்பட்டது. அதன்போது இணைந்த வடகிழக்கின்தலைநகரமாகதிருகோணமலையை அறிவித்திருந்தார்.

அப்போது கூட சமஷ்டியை வலியுறுத்தியே பேசியிருந்தார். 1977க்கு முன்பு பெரும்பான்மை இன நாடாளுமன்ற உறுப்பினர் இருக்கவில்லை. 1977க்கு பின்பு சேருவில எனும் தொகுதியை உருவாக்கி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பில் லீலாரத்ன என்னும் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

2009 மே 18இல் நடைபெற்ற போரின்போது நடந்த சம்பவம் பற்றி பல சர்வதேச நாடுகளுடனும் இந்தியாவுடனும் பேசியிருந்தோம். ஒன்றும் நடக்கவில்லை.

அன்று இதவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாக எல்லாவற்றையும் தடுத்தவர்களே வெட்கமில்லாமல் வாக்கு கேட்கின்றார்கள். அதற்கு சில தமிழ் தேசியத்தில் உள்ளவர்கள் சோரம் போகின்றார்கள்.

அரியநேந்திரனுக்கு அளிக்கும் வாக்குகள் எனக்கல்ல, அது உங்களுக்கானது. ஒவ்வொரு புள்ளடியும் உங்கள் தலையெழுத்தை தீர்மானிக்கும். சங்கு சின்னத்துக்கு மாத்திரம் வாக்களியுங்கள். ஏனையவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம். இன்னும் சில நாட்களில் பொய் வதந்திகள் வரலாம். அதனை நம்பி ஏமாற வேண்டாம். செயற்கை நுண்ணறிவு மூலமாக எனது படத்தை பயன்படுத்தி போலியான பிரசாரங்களை முன்வைத்து செயற்படுவார்கள். எதையும் நம்ப வேண்டாம் என்றார்.





# சொகுசு கார் விபத்து சாரதி படு காயமடைவு

## நானுஓயாவில் சம்பவம்

ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் நானு ஓயா - வெண்டிகோனர் பகுதியில் நேற்று (திங்கட்கிழமை) பிற்பகல் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து அதிசொகுசு காரொன்று வீதியோரத்தில் உள்ள கற்பாறையில் மோதி விபத்துக்குள்ளானதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நுவரெலியாவில் உள்ள தனியார் வைத்தியசாலையில் பணியாற்றும் விசேட வைத்தியர் ஒருவருக்கு சொந்தமான அதிசொகுசு காரே விபத்துக்குள்ளாகியுள்ளது.

கொழும்பிலிருந்து நுவரெலியா நோக்கிப் பயணித்த சொகுசு கார் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் இழுத்துச் செல்லப்பட்டு கற்பாறையில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின்போது 34 வயதுடைய காரின் சாரதி படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காரின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் அல்லது சாரதிக்கு நித்திரை ஏற்பட்டதால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பில் நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கிளிநொச்சி ஐக்கிய மக்கள் கூட்டணியின் தேர்தல் அலுவலகத்தின் மீது தாக்குதல்

## ஒருவர் கைது

கிளிநொச்சி முரசுமோட்டை பகுதியில் உள்ள ஐக்கிய மக்கள் கூட்டணியின் தேர்தல் அலுவலகத்தினை சேதப்படுத்திய சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் நேற்று (திங்கட்கிழமை) ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த அலுவலகம் கடந்த 10ஆம் திகதி அதிகாலை சேதமாக்கப்பட்டுள்ளதுடன் அதனுள்ளிருந்த பொருள்கள் சிலவும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

(05)



# ஹெரோயினுடன் ஒருவர் கல்கிஸ்ஸையில் கைது

கல்கிஸ்ஸ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் சனிக்கிழமை கல்கிஸ்ஸ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கிஸ்ஸ பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ரத்மலான பிரதேசத்தை சேர்ந்த 47 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து 10 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பாக கல்கிஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.(05)

# ஐஸ் போதைப்பொருளுடன் மட்டக்குளியில் ஒருவர் கைது



மட்டக்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமித்புர பகுதியில் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் சனிக்கிழமை மட்டக்குளி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரிகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் மட்டக்குளி பிரதேசத்தை சேர்ந்த 32 வயதுடையவர் ஆவார்.

அவரிடமிருந்து 11 கிராம் 440 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# இதுவரை 934 முறைப்பாடுகள் பதிவு ; சிறுவர்களும் பிரசாரத்தில் ஈடுபாடு

## கபே அமைப்பு குற்றச்சாட்டு



நாடளாவிய ரீதியில் கடந்த 14ஆம் திகதி வரை தேர்தல் வன்முறை தொடர்பாக 934 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன் கடந்த 8ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை தேர்தல் வன்முறை சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவான முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன என்றும் கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மக்கீன் தெரிவித்தார்.

அத்துடன் காத்தான்குடி பிரதேசத்தில் பாடசாலை சிறுவர்கள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுத்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஏறாவூர் நகரசபை மண்டபத்தில் கபே அமைப்பின் கண்காணிப்பில் ஈடுபட்டுவரும் தேர்தல் காண்காணிப்பாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை மாவட்ட இணைப்பாளர் தேசியமானிய ஏ.சி.எம். மீராஸாஹிப் தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் –

கபே அமைப்பு தேர்தல் தொடர்பாக அறிவித்தல் விடுக்கப்பட்ட தினத்திலிருந்து 25 மாவட்டங்களில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றது. இதுவரை கபே அமைப்புக்கு 934 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இதில் அதிகளவான முறைப்பாடுகள் தேர்தல் சட்டவிதிகளை மீறுகின்றமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

2015, 2019 நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல்களுடன் ஒப்பிடும்போது சுமுகமான களநிலைவரம் காணப்பட்டாலும் கடந்த 8ஆம் திகதிக்கு முன்னர் சட்டவிரோத தேர்தல் பிரசாரம் அரச சொத்து துஷ்பிரயோகம் போன்ற முறைப்பாடுகள் அதிகரித்திருந்ததுடன் அந்த காலப்பகுதியில் வன்முறைகள் குறைவாக இருந்தன.

8ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வன்முறைகள் அதிகரித்துள்ளன.

அத்துடன் சமூகவலைத்தளங்களை பாவித்து வேட்பாளர்களை இழிவுபடுத்துகின்ற பொய்யான பிரசாரங்கள், வீடியோ பதிவுகள் போலி முகநூல் மற்றும் வட்ஸ்அப் ஊடாக இடப்பட்டுள்ளன.

இவ்வாறான செயற்பாடுகள் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கு பாதகத்தை ஏற்படுத்தக்கூடியனவாக இருக்கிறது.

தேர்தல் ஒன்று வரும்போது சமாதானமான தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும் என்பதற்காக தேர்தல் நடாத்துவதற்கு முன்னர் மாவட்ட இணைப்பாளர்கள் சிவில் அமைப்புக்கள் மற்றும் பெண்கள் அமைப்புக்களுடன் தொடர்புகொண்டு சமாதான தேர்தலை செய்ய முடியாமல் பிரதேசங்கள் மற்றும் எந்தெந்த இடங்களில் வன்முறை அதிகரிக்கப்படலாம் என பதிவுகளை செய்வது வழமை.

இதில் மட்டக்களப்பு மாவட்டத்திலே காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி பிரதேசங்களில் வன்முறை அதிகரிக்கப்படலாம் என்கிற சூழ்நிலை இருந்தபோதிலும் இதுவரை எந்தவொரு பாரிய வன்முறைகள் இடம்பெறவில்லை.

சர்வதேச கண்காணிப்பாளர்கள் நாடளாவிய ரீதியில் எல்லா பிரதேசங்களிலும் சிவில் அமைப்புக்கள் தேர்தல் கண்காணிப்பாளர்களை சந்தித்து தேர்தல் கள நிலைவரம் தொடர்பாக அறிக்கைகளை பெற்றுவருகின்றனர். அதேவேளை கபே அமைப்பு தேர்தல் தினத்தில் 3 ஆயிரம் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தவுள்ளது.

இருந்தபோதும் அரசியல் கட்சியின் வேட்பாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் அனைவரிடம் வேண்டிக்கொள்வது என்னவென்றால், இதுவரை காலப்பகுதியில் பாரிய வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறாதவாறு தேர்தல் பிரசார நடவடிக்கையில் எவ்வாறு ஈடுபட்டு வந்தீர்களோ அதேபோன்று தேர்தல் தினத்திலும் அதனை தொடர்ந்து வரக்கூடிய 7 நாள்களுக்குப் பின்னரான காலப்பகுதிக்குள் சமாதானமான தேர்தலுக்காக ஒன்றுபடவேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம். – என்றார். (05)



காலைக்கதிர் Kalaikkathir

## காலம்....

### (இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களத் தலைவர்கள் இதுவரை காலமும் செயற்பட்டவாறே இப்பொழுதும் செயற்படுகின்றார்கள். இதுவே அதற்கு ஒரு சிறந்த உதாரணம் என்று உலக நாடுகளுக்கு நாம் கூறமுடியும். தற்போது உலக நாடுகள், முக்கியமாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம், இதுவரை காலமும் இலங்கை தனது கடமைகளில் இருந்து தப்பித்து வந்தமை பற்றி அறிக்கைகள் இட்டுள்ளன. இந்த நேரத்தில் தமிழர்களுக்கு நன்மை செய்ய சிங்களத் தலைவர்கள் தலைப்படுவார்களேயன்றி தீங்கு விளைவிக்க விரும்பமாட்டார்கள்.

அதுமட்டுமல்ல. பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் கடந்த வாரம் என்னை வந்து என் வீட்டில் சந்தித்தபோது சிங்கள மக்கள் இன ரீதியான கருத்துக்களைத் தற்போது விரும்புவதில்லை என்றும் அவர்கள் இவ்வாறான கருத்துக்களால் கவலையுற்றும் களைத்துப் போயும் உள்ளார்கள் என்றும் கூறினார். அவர் வந்த காரியம் வெற்றியடையவில்லை. நாங்கள் திடமாக அரியநேத்திரனுக்குப் பின்னாலேயே அணி வகுத்து நிற்கப் போகின்றோம் என்ற என் கருத்தை அவர் சுமந்து திரும்பினார்.

சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்று கூறும் எம் தமிழ் மக்கட் பிரிவினர் அவ்வாறு வாக்களித்து பின்னர் நாம் பேரம் பேசலாம் என்று கூறுகின்றார்கள். முன்னர் இவ்வாறு கூறித்தான் சிங்கள வேட்பாளர்களுக்கு எம் மக்கள் வாக்களித்தார்கள். ஆனால் கண்ட பயன் ஏதுமில்லை. இவ்வாறு பேரம் பேசப் போவதாகக் கூறுபவர்கள் முதலில் கடந்த கால பேரப் பேச்சுக்களினால் எதனைப் பெற்றுக் கொடுத்தார்கள் என்பதைக் கூற வேண்டும். வெல்ல முடியாது என்று கண்டவுடன் அடக்கு முறையாளர்களுடன் கைகோர்க்க வேண்டும் என்பதா இவர்களின் அரசியல் சித்தாந்தம்?

2015 பிப்ரெவரி 3 சம்பந்தனும் சுமந்திரனும் என் கொழும்பு இல்லத்திற்கு வந்தார்கள். வந்து பலதையும் பேசிவிட்டு சம்பந்தன் அவர்கள் ''நாளை நான் சுதந்திரதின விழாவில் கலந்து கொள்ள இருக்கின்றேன். நீங்களும் வருவீர்களா?'' என்று கேட்டார். சுமந்திரன் உடனே தான் வருவதாகக் கூறினார். நான் கூறினேன் - ''றோயல் கல்லூரியின் இளைஞர் படையணியின் லான்ஸ் சேர்ஜன்ட் (Lance Serjeant) என்ற வகையில் சுதந்திர தின அணி வகுப்பில் 1958ம் ஆண்டில் பங்கு பற்றியதன் பின்பு இதுவரையில் எந்த ஒரு சுதந்திர தின விழாவிலும் நான் கலந்து கொள்ளவில்லை. நீதியரசராக இருந்த போதுகூட நான் கலந்து கொள்ளவில்லை. எமக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை. ஆகவே தான் நான் கலந்துகொள்ளவில்லை. நீங்கள் வேண்டுமென்றால் கலந்துகொள்ளுங்கள்' என்றேன். ''இல்லை! அவர்களுடன் சேர்ந்து பயணித்தால்த்தான் நாம் எமது உரிமைகளைப் பெறமுடியும்'' என்றார் சம்பந்தன். ''அவ்வாறு பங்குபற்றுவதால் நன்மை கிடைக்கும் என்று நீங்கள் நினைத்தால் நீங்கள் கலந்து கொள்ளுங்கள். ஆனால் நான் வரமாட்டேன்'' என்றேன்.

அன்றிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் 2015 பெப்ரவரி 10 அயன்று நான் தமிழர் இனஅழிப்பு தீர்மானத்தை வடமாகாண சபையில் நிறைவேற்றினேன்.

எனக்கும் தமிழ் அரசுக் கட்சியின் தலைமைத்துவத்துக்கும் இடையிலான முரண்பாடுகள் அப்பொழுதுதான் தொடங்கின. அந்த கால கட்டத்தில் சுமந்திரனுக்கு மந்திரிப்பதவி அளிக்கப்படவிருக்கின்றது என்று பத்திரிகைகள் பல ஆருடம் கூறின. எமது இனவழிப்பு தீர்மானத்துக்குப் பிறகு குறித்த மந்திரிப்பதவி சுவாமிநாதனுக்கு வழங்கப்பட்டது. அப்பொழுது கிடைக்காத பதவியை இப்பொழுது சஜித் இடம் இருந்து சுமந்திரன் அவர்களுக்குப் பெறத்தான் தமிழ் அரசுக் கட்சியின் சுமந்திரன் அணி சஜித்திற்கு வாக்களிக்க முடிவு செய்ததோ நான் அறியேன்.

தமிழர்களுள் தனிப்பட்டவர்களின் பதவிகள் எமக்கு நன்மைகளைத் தர மத்திய ஆட்சியாளர்களின் கோட்பாடுகள், அவர்களின் இன ரீதியான மனோநிலைகள் இடங்கொடுக்கமாட்டா என்பதை நாம் நினைவில் வைத்திருக்கவேண்டும். சம்பந்தன் சுதந்திர தினவிழாவில் கலந்துகொண்ட பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் ஆகினார். உத்தியோகபூர்வ மாளிகையைப் பெற்றார். பதவி போன பின்னரும் கடைசி வரையில் மாளிகையில் வாழ்ந்தார். இவை அவருக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் தமிழ் மக்களுக்கு என்ன தரப்பட்டது? ஆகவே சிங்கள வேட்பாளர் ஒருவருக்கு வாக்களித்தால் தனிப்பட்ட பதவிகள், சுகங்கள், சலுகைகள் கிடைப்பன. ஆனால் தமிழ் மக்களுக்கு கட்டாக எதுவும் கிடைக்காது.

என்னை இன்று அழைத்தமைக்கு நன்றி. இனி உங்கள் யாவரையும் மருத்துவச் சிகிச்சையின் பின்னரே சந்திப்பேன். நான் விரைவில் கொழும்பு லங்கா மருத்துவமனையில் சேர்ந்து கொள்ள இருக்கின்றேன். அரியநேத்திரனுக்கு எம் மக்கள் யாவரும் வாக்களிக்க வேண்டும். இதுவரை காலமும் 'இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன' என்ற மனோநிலையில் இருந்து வந்த எமது தமிழ் உறவுகள் கூட, இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் பங்கு பற்றி உங்கள் வாக்குகளை சங்கு சின்னத்திற்கு அளிக்க வேண்டும். செப்டெம்பர் 21 காலையில் தமிழ்ப் பிரதேசங்கள் எங்கணும் சங்கு முழங்கினால் நல்லது. ஒவ்வொருவரும் தமது கைத்தொலைபேசியில் அந்த சங்கு ஒலியை ஒரே நேரத்தில் கிளப்பினாலே போதும். மருத்துவமனைக்குச் செல்லும் எனது கோரிக்கை இதுவே. சங்கே முழங்கு! எல்லோருக்கும்.

## கல்முனை ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றது.

ஆனாலும் எமது மக்கள் போராட்டத்தின் போது கலந்து கொண்டிருந்த பல அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் சார் தீர்மானங்களை முடிவுகளை எடுக்கக்கூடிய நபர்கள் மூலமாகவும் அரசுக்கு பல்வேறு செய்திகளை நாங்கள் வழங்கி இருந்தோம். அது மாத்திரமில்லாமல் போராடுகின்ற மக்கள் சார்பாக அன்று நடைபெறுகின்ற போராட்டம் தொடர்பிலான ஆதாரங்களோடும் எமது மக்களுடைய கோரிக்கைகளோடும் அனைத்து சிவில் சமூகக் கட்டமைப்பினுடைய இறப்பர் முத்திரையோடு தொடர்ச்சியாகவும் இந்த நாட்டினுடைய ஜனாதிபதி, பிரதமர், உள்நாட்டலுவல்கள் அமைச்சர், அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண ஆளுநர். மாவட்ட செயலாளர் என பல தரப்பினருக்கும் எமது கோரிக்கைகளை தொடர்ச்சியாக அனுப்பியிருந்தோம் .

இருந்தாலும் கூட ஒரு சில பதில்கள் ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகம் அமைச்சின் செயலாளர் போன்றவர்களிடமிருந்தும் மாவட்ட செயலாளரிடமிருந்தும் கிடைத்திருந்தாலும் அவைகளிலே எது விதமான திருப்தியும் எங்களுக்கு இல்லை அல்லது எங்களுடைய கோரிக்கைகளுக்குரிய பதிலாக அவைகள் அமையவில்லை என்பதை வெளிப்படுத்துவதோடு அதையும் கடந்து தொடர்ந்தும் எங்களுடைய மக்கள் உரிமைக்காக வீதியில் இறங்கிக் குரல் கொடுத்து அமைதி வழியில் போராடுகின்றனர்.

ஆனாலும் இந்த அரசு எமது மக்களுடைய போராட்டத்தை மதிக்கவோ அல்லது எமது மக்களுடைய நியாயமான போராட்டத்திற்கான தீர்வை வழங்குவதற்கோ முன் வந்திருக்கவில்லை என்பதையும் மாறாகத் தொடர்ந்தும் ஏமாற்றியே வந்துள்ளது என்பதையும் கூற கடமைப்பட்டுள்ளதோடு இந்தப் போராட்டமானது ஒரு இனத்திற்கோ அல்லது தனி நபர்களுக்கோ எதிரானது கிடையாது என்பதையும் இது ஒரு அரச நிர்வாக ரீதியான கட்டமைப்பை சீர் செய்வதற்கான போராட்டம் மாத்திரமே என்பதையும் வெளிப்படுத்துகின்றோம்.

இவ்வாறான சூழ்நிலையில் இந்த நாட்டில் ஒரு ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து இந்த நாட்டின் தற்போதைய ஜனாதிபதி எனும் அடிப்படையில் எமக்கான தீர்வை வழங்கக்கூடிய உயர் அதிகாரத்தில் இருக்கும் ரணில் விக்கிரமசிங்க அவர்களுடன் தொடர்ந்தும் நேரடியாகவும் அரசியல்வாதிகள் ஊடாகவும் ஜனாதிபதியினுடைய கவனத்திற்கு எமது விடயத்தைக் கொண்டு செல்லக்கூடியவர்கள் ஊடாகவும் பல்வேறு முயற்சிகளை நாங்கள் எடுத்திருந்தோம்.

விசேடமாக எமது மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கிழக்கு மாகாண ஆளுநர் ,ஜனாதிபதியின் மட்டக்களப்பு மாவட்ட 24 மணி நேர செயற்குழு தலைவர் உள்ளிட்டவர்கள் மற்றும் பல தமிழ் சிங்கள அரசியல்வாதிகள் ஊடாகவும் பல முயற்சிகள் எடுத்திருந்தும் எமது வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படாத நிலை காணப்படுவதோடு நாம் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டோம்.

இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்ற அமைச்சர்கள் வியாழேந்திரன் மற்றும் பிள்ளையான் போன்றவர்களுடன் கூட நாங்கள் பேசியிருந்தோம் எமக்காக ஜனாதிபதியோடு பேசி எமது உரிமைக்கான குரலாக நீங்களும் இருந்து குறைந்தது ஒரு கணக்காளரை பெற்றுத் தாருங்கள் அல்லது நடைமுறையில் இருந்து நிறுத்தப்பட்டிருக்கின்ற வங்கிக் கணக்கையாவது மீள திறந்து தாருங்கள் என்றும் கேட்டிருந்தோம்.

யாரும் இதுவரை அதை செய்து கொடுக்கவில்லை எமக்காக எதையும் செய்யவும் இல்லை என்பதையும் அவர்களும் தொடர்ந்தும் இன்றுவரை எமது மக்களை ஏமாற்றியுள்ளனர் என்பதையும் வெளிப்படுத்துவதோடு மீண்டும் இறுதியாக நாங்கள் கடந்த 11.09.2024 அன்றும் கூட திருக்கோவில் பகுதியில் நடைபெற்ற ஜனாதிபதியினுடைய தேர்தல் பிரச்சார கூட்டத்தின் போது எங்களுக்காக ஒரு தீர்வை தர இருக்கிறார் என்று அறிந்தோம் குறைந்தபட்சமாக ஒரு கணக்காளர் அல்லது அதனிலும் குறைவாக தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்ட பின்னர் செயல்படுத்தக் கூடியதாக இருக்கின்ற நிறுத்தப்பட்ட வங்கிக் கணக்கை மீண்டும் ஆரம்பிப்பது பற்றியும் நாங்கள் கேட்டிருந்தோம்.

ஆனால் அதுவும் எங்களுக்கு செய்து கொடுக்கப்படவில்லை என்பதையும் கூறுவதோடு நாங்கள் நூறு வீதம் நம்பி இருந்த ஜனாதிபதியினுடைய பதில் இவ்வாறுதான் இருந்தது என்பதையும் எமது மக்களுக்குத் தெளிவுபடுத்துவதோடு, இதுவரையில் ஜனாதிபதியின் தரப்பிலிருந்து எங்களை பலர் சந்தித்திருக்கிறார்கள் அதே போன்று நாங்களும் அவரை பல தடவைகள் பலதரப்புகள் ஊடாக சந்தித்திருக்கிறோம்.

இதில் எந்த நன்மையும் இதுவரை ஏற்படவில்லை என்பதையும் இன்றுவரை அவர் எமது மக்களை ஏமாற்றிவிட்டார் என்பதையும் ஆனால் எமது மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக அவர்களது முகவர்கள் மற்றும் உள்ளூர் அரசியல்வாதிகளாடாக பொய் செய்திகள் வாக்குறுதிகளோடு பலர் வருகிறார்கள் அவர்கள் யாரையும் நம்ப வேண்டாம் எமது செயல்க விடயத்தில் அவர்கள் கூறும் செய்திகளும் வாக்குறுதிகளும் பொய்யானவை என்பதையும் வெளிப்படுத்துகிறோம்.

அதேபோன்று மற்றுமொரு வேட்பாளராக இருக்கக்கூடிய சஜித் பிரேமதாச தரப்பில் இதுவரை யாரும் போராட்டம் செய்துவருகின்ற மக்களை அல்லது மக்கள் சார்ந்தவர்களை சந்திக்கவில்லை என்பதையும் நாங்களும் சந்திப்பதற்கான சந்தர்ப்பங்களை அவர்கள் எங்களுக்கு ஏற்படுத்தவில்லை என்பதையும் வெளிப்படுத்துவதோடு அவர்கள் தற்போது ஆட்சியாளர்கள் கிடையாது.

குறைந்தபட்சம் வாக்குறுதியையாவது தருவதற்கு முன்வராதது ஏன் என சிந்திக்க வைப்பதோடு சிலவேளை அவருடன் எமது செயலக விடயத்திற்கு எதிராக செயற்படுகின்ற தரப்பினர் இருப்பதனால் எம்மை சந்திக்கவில்லையோ என நினைப்பதோடு அதுவும் காரணமாக இருக்கலாம் என்பதையும் நாங்கள் வெளிப்படுத்துவதோடு இவர்கள் தரப்பிலும் இதன் பின்னர் யாராவது அவர்களது முகவர்கள் அல்லது உள்ளூர் அரசியல்வாதிகள் பொய் செய்திகள் பொய் வாக்குறுதிகளுடன் வரலாம் என்பதால் அவர்கள் தொடர்பிலும் அவதானமாக இருங்கள் என்பதையும் கூறுகின்றோம்.

மாற்றுமொரு தரப்பாக இருக்கின்ற .அநுரகுமார திசாநாயக்க அவர்களுடைய தரப்பிலிருந்து இரண்டு தடவை எம்முடன் தொலைபேசி மூலமாகப் பேசியிருந்தார்கள் இரண்டு தடவை எங்களை நேரிலும் சந்தித்திருந்தார்கள் அவர்களும் தற்போது ஆட்சியாளர்களாக இல்லை என்பதனால் எமக்கு வாக்குறுதிகளை வழங்கி இருந்தார்கள்.

அதாவது தாங்கள் ஆட்சிக்கு வருகின்ற பட்சத்தில் கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் மாத்திரம் அல்ல இலங்கையில் காணப்படுகின்ற ஒட்டுமொத்தமான நிர்வாக ரீதியான அத்தனை பிரச்சினைகளும் அரசியல் தலையீடுகள் இன்றி தீர்த்து வைக்கப்படும் என்று ஒரு வாக்குறுதியை எங்களுக்கு வழங்கியிருந்தார்கள் என்பதையும் கூறிக்கொள்வதோடு இவர்கள் தரப்பிலும் சில முகவர்கள் ஒருநாளும் எமது மக்கள் போராட்டத் தளத்திற்கும் வராதவர்கள் மக்கள் போராட்டம் பிழை என கூறியவர்கள் தம்மை போராட்டக்குழு என அறிமுகப்படுத்திச் சென்று சுயலாப அரசியல் செய்திருக்கிறார்கள் எனவே அவர்கள் தொடர்பிலும் மக்கள் அவதானமாக இருங்கள் எனவும் கூறிக் கொள்கிறோம்.

அத்தோடு இம்முறை தமிழர் தரப்பாக ஒரு வேட்பாளரும் களத்தில் தமிழரின் தனித்துவ அடயாளத்திற்காகவும் ஒற்றுமையான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்காகவும் நிறுத்தப்பட்டுள்ளதனால் அதுபற்றியும் பொதுமக்களாகிய நீங்களே சிந்திக்க வேண்டும் சிந்தித்து முடிவெடுத்து உங்கள் வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும் .

இந்த செய்தியாளர் மாநாடு ஊடாக நாங்கள் வெளிப்படுத்துவதோடு, இவ்வாறான நிலையிலே நாங்கள் எந்த முடிவையும் எடுக்க முடியாத தர்ம சங்கடமான சூழ்நிலை எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது அதேபோன்று எங்களுடைய மக்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது என்பது எங்களுக்கு தெரியும் இருந்தாலும் எங்களுடைய மக்கள் புத்திசாதுர்யமாக சிந்திக்க கூடியவர்கள் இவ்வளவு காலமும் ஒவ்வொரு தரப்புகளால் மாறி மாறி ஏமாற்றப்பட்டவர்கள் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும் அதனால் நன்றாக சிந்தித்து தங்களுடைய வாக்குகள் தங்களுக்கு உரித்தானது உரிமையுடையது அது பலம் மிக்கது என்பதினால் நன்றாக சிந்தித்து வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கையுடன், யாருக்கும் வாக்களிக்குமாறு கூற முடியாத ஒரு சூழ்நிலையில் எங்களுடைய கருத்தை வெளிப்படுத்துகிறோம்.

இந்தத் தேர்தலில் வெற்றி பெறப் போகின்ற வெற்றி பெற்று எதிர்காலத்தில் நாட்டின் ஜனாதிபதியாக வரப்போகின்றவரிடம் நாங்கள் கேட்பது தயவு செய்து நீங்கள் ஜனாதிபதியாக வருகின்ற பட்சத்தில் எங்களுடைய கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான நிர்வாக ரீதியான அத்தனை விடயங்களையும் தீர்த்துத் தனியான ஒரு பிரதேச செயலகமாக இது தனித்துவமாக இயங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டும் எனவும் பணிவாக கேட்டுக் கொள்வதோடு இந்த ஊடகவியலாளர் சந்திப்பின் பின்னர் பல தரப்புகளையும் சேர்ந்த பல முகவர்கள் உள்ளூர் அரசியல்வாதிகள் மக்களை நாடி வரலாம் பொய் செய்திகளையும் பொய் வாக்குறுதிகளையும் கூறி ஏமாற்றலாம்.

ஆனால் அவை எதையும் நம்ப வேண்டாம் ஆனால் உங்கள் வாக்குகளைக் கட்டாயம் உங்கள் நம்பிக்கையின் அடிப்படையில் சிந்தித்துச் செலுத்துங்கள் எனவும் கல்முனையில் எங்களின் வாக்கு பலத்தினை வெளிக்காட்டுவதற்கு அனைவரும் 100ஶூ உங்கள் வாக்குகளை நீங்கள் விரும்புகின்ற யாருக்காவது வழங்கி எமது வாக்குப் பலத்தை வெளிக் காட்டுவதன் மூலமாகவே எம்முடைய அடுத்தகட்ட நகர்வை நாங்கள் முன்னெடுக்க முடியும் .

உங்கள் வாக்களிப்பு வீத அதிகரிப்பு எமது போராட்டத்திற்கு இன்னும் அதிகமாக வலுச்சேர்க்கும் என்பதையும் கேட்டு எங்களுடைய போராட்டம் நாளைய 175 வது நாளுடன் தேர்தல் சட்ட விடயங்கள், அசௌகரியங்கள் எமது மக்களின் பாதுகாப்பு என்பவற்றைக் கருத்தில் கொண்டு தற்காலிகமாகத் தேர்தல் வரையும் நிறுத்தப்பட்டு எதிர் வருகின்ற தேர்தலில் வெற்றி பெற்று ஒரு ஜனாதிபதி வருகை தருகிற போது அவரிடமும் எங்களுடைய கோரிக்கை மக்கள் சார்பாக கொண்டு சேர்க்கப்பட்டு அவர்களுடைய தீர்வுளங்களுக்கு கிடைத்தால் அவர்களுக்கு விசுவாசமாக எங்களுடைய மக்கள் எப்போதும் இருப்போம் என்ற ஒரு விடயத்தையும் கூறி அவ்வாறு எங்களுக்கான தீர்வு கிடைக்காவிட்டால் மீண்டும் தொடர்ச்சியாக எங்களுடைய போராட்டம் தொடரும் என்பதையும் கூறிக் கொள்கின்றோம் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழ் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியின் நிலைப்பாடு பற்றி நாம் ஏற்கனவே அறிவித்திருந்தோம். இவ்விடயத்தைப் பொறுத்தமட்டில் நான் இங்கு இருந்திருந்தால் எனது நிலைப்பாடு வேறானதாக இருந்திருக்கும் என்று சர்ச்சைகளை ஏற்படுத்தும் வகையில் திட்டமிட்டு சில கருத்துக்கள் பகிரப்பட்டு வருகின்றன.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் வந்த பின்னரே கொள்கை ரீதியில் சில விடயங்களை நாம் தெளிவுபடுத்தியிருந்தோம். குறிப்பாக 2009 உடன் தமிழ்த் தேசிய அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்தவிட்டதாகவே சிங்கள தேசம் நம்பியது. சிங்கள தேசிய வாதத்தின்

தொடர்ச்சி 9ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

## தமிழ் ....

### (எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடாக தமிழ்த் தேசியவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்துவிடலாம் என நம்பப்பட்ட சூழலில், நாம் அதனை நிராகரித்து தமிழ்த் தேசிய தொடர்பான நிலைப்பாட்டை உறுதியாகக் கடைப்பிடித்து வந்திருக்கிறோம்.

அந்த வகையில் தமிழ் பிரதிநிதித்துவத்தை இழக்காமல், அதேநேரம் தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தி, சிங்கள பௌத்த தேசியவாதத்துக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிக்காட்டக்கூடிய ஒரேயொரு தேர்தல் ஜனாதிபதித் தேர்தல் மாத்திரமேயாகும். ஏனெனில் இத்தேர்தலின் ஊடாக நாம் அடைந்து கொள்ளப்போவது எதுவுமில்லை. எனவே இத்தேர்தலைப்பகிஷ்கரிப்பதன் ஊடாகசிங்கள தேசியவாதம் உச்சத்தில் இருக்கையில் தமிழ்த் தேசிய வாதம் மூலம் வலுவான அழுத்தத்தைப் பிரயோகிக்கமுடியும்.

அடுத்ததாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுக்கட்டமைப்பினரால் அரியநேத்திரன் களமிறக்கப்பட்டிருக்கிறார். இருப்பினும் தமிழர்களுக்கு சாபக்கேடாக இருக்கின்ற 13 ஆவது திருத்தத்தை ஆதரித்தவர்களும், ரணில் விக்ரமசிங்கவே சிறந்த ஆட்சியாளர் எனக் கூறியவர்களுமே தற்போது அந்தப் பொதுக்கட்டமைப்பில் இருக்கிறார்கள். எனவே அவர்கள் அரியநேத்திரனைக் களமிறக்குவதன் ஊடாக தமிழ்த் தேசியத்தைக் கைவிட்டு, ஒற்றையாட்சிக்குள் 13ஆவது திருத்தத்தை முன்னிலைப்படுத்தக்கூடிய சூழலை உருவாக்க முயற்சிக்கிறார்கள். எனவேதமிழ் மக்கள் அரியநேத்திரனுக்கு வாக்களிப்பதும், ஒற்றையாட்சியை வலியுறுத்தும் சிங்கள வேட்பாளருக்கு வாக்களிப்பதும் ஒன்றுதான்.

அரியநேத்திரனுக்கு வாக்களிக்கும் பட்சத்தில், தேர்தலுக்குப் பின்னர் தமிழ்த் தேசிய அரசியலை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கான சகல சதித்திட்டங்களும் முன்னெடுக்கப்படும் என்பதை இப்போதே கூறிவைக்கிறோம்.

அதேபோன்றுஇங்குநாம்பூகோளஅரசியல் சூழலையும் கருத்திற்கொள்ளவேண்டும். மேற்குலகநாடுகளும், இந்தியாவும்இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க வெற்றியீட்டுவதையே விரும்புகின்றன. ஆனால் ரணில் விக்ரமசிங்கவை தமிழ் மக்களுக்குசாதகமானவராகக்காண்பித்துவந்த நிலை மாறியிருக்கும் தற்போதைய சூழ்நிலையில், அவருக்கு தமிழர்கள் வாக்களிக்கமாட்டார்கள்என்பதைஇந்தியாவும், மேற்குலகமும் புரிந்துகொண்டிருக்கிறது. ஆகவே ஏனைய வேட்பாளர்களுக்கு அளிக்கப்படக்கூடிய வாக்குகளை ரணில் விக்ரமசிங்கவுக்கு அளிக்கச்செய்வதிலும் அல்லது ரணிலுக்குக் கிடைக்காத வாக்குகள் ஏனைய வேட்பாளர்களுக்கும் கிடைக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவதையும் இலக்காகக்கொண்டு சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே இதுவரையில் சமஷ்டி என்ற வார்த்தையை உச்சரிக்காமல் இருந்த தமிழ் அரசுக் கட்சி, இம்முறை தேர்தலில் சமஷ்டியை வலியுறுத்தி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்திருக்கிறது. எனவே இன்றளவிலே தமிழ்த்தேசியக்கொள்கைக்கு உண்மையாக இருப்பதற்கான வாய்ப்பு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பதன் மூலமாக மாத்திரமே சாத்தியமாகும். ஆகவே இனிவருங்காலங்களில் தமிழர்களை எவ்வகையிலும் ஏமாற்றமுடியாது என்பதை இந்தத் தேர்தலில் காண்பிக்கவேண்டும் - என்றார்.

## அனுராதபுரம்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநுரவும்திருமண விருந்து சாப்பிடுகின்றனர். இந்தநாட்களில்அவர்கள்அரசியல்தேனிலவை கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். என்னை தோல்வியடையச் செய்வதே அவர்களுடைய 'டீல்' ஆகும். இந்த திருட்டுத்தனமான மோசடியான 'டீல்''களுக்கு இடமளிக்க முடியாது.

செப்டெம்பர் 21 வரை அவர்களுக்கு விருப்பமான முறையில் 'டீல்'களைச் செய்துகொண்டு அரசியல் தேனிலவைக் கொண்டாட முடியும். நாட்டு மக்கள் இவர்களின்திருட்டு 'டீல்'களையும்தேனிலவுக் கொண்டாட்டத்தையும் நிறைவுக்கு கொண்டு வருவார்கள். மக்கள் வெற்றி பெறுகின்ற ஒரே மார்க்கம் ஐக்கிய மக்கள் சக்தி ஆகும்.

மக்களை வெற்றி பெறும் செய்வதற்கு ஒரே வழி ஐக்கிய மக்கள் சக்தியை வெற்றி பெறச் செய்வதே ஆகும். அவ்வாறு வெற்றி பெற்ற பின்னர் முழு நாட்டிலும் அபிவிருத்தித் தளிர்கள் முளை விட ஆரம்பிக்கும்.

இளைஞர்களுக்கான மொழி பயிற்சிகள், கணிணிவிஞ்ஞானம், தகவல்தொழில்நுட்பக் கல்வி என்பனவற்றை வழங்கி, கல்விக்கான உரிமையையும்தொழிலுக்கானஉரிமையை உறுதி செய்வோம்.

அறிவை மையமாகக் கொண்ட பொருளாதாரமேம்பாட்டுக்குவழியமைப்போம். அனைத்து பாடசாலைகளையும் சகல வசதிகளையும் கொண்ட பாடசாலைகளாக அபிவிருத்தியடையச் செய்வோம்.

விவசாயிகளுக்குநிவாரணஅடிப்படையில் உரத்தைவழங்குவதோடுவிவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும்முச்சக்கரவண்டிஉரிமையாளர்களுக்கும், பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து பஸ் உரிமையாளர்களுக்கும் கியூ.ஆர்.முறையில்எரிபொருள்நிவாரணத்தை வழங்குவோம். யானை மனித மோதலை நிறுத்துவதற்காக காணி முகாமைத்துவ திட்டமொன்றையும் உருவாக்குவோம்.

சோளம்அறுவடைசெய்யப்பட்டகாலத்தில் ரணில் விக்கிரமசிங்க வெளிநாடுகளில் இருந்து சோளத்தை இறக்குமதி செய்தார். ஊவாவில் இருக்கின்ற உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களுக்கும் வெங்காய உற்பத்தியாளர்களுக்கும்இதேவிடயங்களைச் செய்தார்.

மக்களுக்கான நிவாரணங்களை வழங்குவதைவிடதன்னைதோல்வியடையச் செய்வது அவர்களுக்கு முக்கியமானதாக இருக்கின்றது. ஆனாலும் இந்த சந்தர்ப்பத்தில் மக்கள் சரியான தீர்மானத்தை எடுத்திருக்கின்றார்கள்.

அரச துறையிலும் தனியார் துறையிலும் உள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் துப்புரவாளர்கள் ஆகியோரின் அடிப்படை சம்பளத்தை 25,000 ரூபா வரை அதிகரிப்பதற்கான சட்ட வரைவுகளை முன்னெடுப்போம்.

ஜனாதிபதிமாளிகைகள்பொதுமக்களுக்காக ஒதுக்கப்பட வேண்டும். 220 இலட்சம் மக்களுக்காகசுபீட்சம்என்கின்றமாளிகையை உருவாக்குவோம் என்றார்.

## சமையலறைப்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2005 தேர்தலில் மஹிந்த ராஜபக்சவுக்கு எதிராக போட்டியிட்டேன். வடக்கு மக்கள் வாக்களிக்காதால் தோற்றேன். அடுத்த தேர்தலில் சந்திரிகாவுடன் போட்டியிட்டேன். 2016இல் பிரதமராக ஐ.எம்.எப் உடன் பேசினேன். வரியைக் குறைத்தால் சர்வதேச நாணய நிதியத்தால் உதவி வழங்கப்படாது என்று அறிவிக்கப்பட்டது. 2019 இல் நான் போட்டியிடவில்லை. கோட்டாபயவுடன் சஜித் பிரேமதாஸபோட்டியிட்டார். வரியைக்குறைக்க வேண்டாம் என்று அன்று கோரினேன். ஆனால், கேட்டாபய ஆட்சிக்கு வந்த பின் வரியைக் குறைத்தார். சர்வதேச நாணய நிதியம் உதவி வழங்குவதை நிறுத்தியது. பொருளாதாரம் வீழ்ந்தது.

வரிசையில் நீங்கள் கஷ்டப்பட்டபோதும் பிரதமர் பதவி பொறுப்பேற்கக் கேட்டு பிச்சை எடுக்கும் நிலை ஏற்பட்டது. இது கின்னஸ் சாதனையாகும். அவர்களின் நாட்டின் மீதான தேசப்பற்றும் உங்கள் மீதான அர்ப்பணிப்பும் அவ்வளவுதான்.

ஆட்சியை முன்னெடுக்க மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழு எனக்கு உதவியது. அதற்கு நன்றி தெரிவிக்கிறேன். அவர்களின் உதவியுடன் தான் திட்டங்களை முன்னெடுத்தேன். வஜிர அபேவர்தன ஆதரவு வழங்கினார். ஏனைய கட்சிகளின் ஆதரவும் கிடைத்தது.

சமையலறையில் உள்ள பிரசினைகள் குறித்து சிந்தித்தே அநேகமான விடயங்களை மேற்கொண்டேன். 2025இல் சமையலறைப் போரை நிறைவு செய்வேன். இவ்வாறு வீழ்ந்த நாடுகள் எழுச்சி பெற பல வருடங்கள் பிடித்தன. அரச ஊழியர்கள் வேலை நீக்கப்பட்டனர். சம்பளம் குறைக்கப்பட்டது. ஆனால் நான் அதில்எதனையும்செய்யவில்லை. ஸ்தீரநிலை ஏற்பட்டாலும் மீண்டும் சரிவு ஏற்படலாம். உறுதியான நிலையை ஏற்படுத்தவே 5 வருட காலம் கோருகிறேன்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தைத் தவிர வேறு வழியில்லை. அந்தத் திட்டத்தைப் பாதுகாத்து முன்னேற வேண்டும். அதனால்தான் அடுத்த 5 ஆண்டுகளுக்கு மக்கள் ஆணையை கோருகிறேன். போட்டி நிறைந்த ஏற்றுமதி பொருளாதாரத்தை மேற்கொண்டு பணம் சம்பாதிக்க வேண்டும். அதற்காக விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை செயல்படுத்தியுள்ளோம்.

இப்பகுதியில் துரியன் சாகுபடி செய்யவேண்டும். துரியன் பழங்களை எடுத்து சீனாவுக்கு அனுப்பலாம். துரியன் ஏற்றுமதி மூலம் தாய்லாந்து 1,000 மில்லியன் டொலர்களைச் சம்பாதிக்கிறது. அடுத்த 05 வருடங்களில்கந்தளாய்பிரதேசத்தைவிவசாய பிரதேசமாக அபிவிருத்தி செய்வதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

திருகோணமலை துறைமுகம் இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தி செய்யப்படுகிறது. சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்புநிலையத்தைதிருகோணமலைக்கு கொண்டுவரவும் திட்டமிடப்பட்டுள்ளது. சம்பூர் சூரிய சக்தி பிரதேசமாக அபிவிருத்தி செய்யப்படுகிறது. சுற்றுலாத் துறையும் மேம்படுத்தப்படும். இந்தியாவுடன் இணைந்து திருகோணமலையை அபிவிருத்தி செய்ய இருக்கிறோம். கடந்த இரண்டு வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நாம் ஆரம்பித்த வேலைத் திட்டத்தின் காரணமாக ஜப்பான், இந்தியா போன்ற நாடுகளின் ஆதரவு கிடைத்துள்ளது. இந்தப் பயணத்தை நாம் தொடர வேண்டும். எனவே, சமையலறை பிரச்சினையைத் தீர்க்க அனைவரும் கேஸ் சிலிண்டருக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்' என்றார்.

## அரியநேத்திரனை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

வேட்பாளர் பா.அரியநேத்திரன், தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், க.அருந்துவபாலன், அரசியல் பத்தி எழுத்தாளர் நிலாந்தன், -முன்னாள் போராளி காக்கா என்று அழைக்கப்படும் மனோகரன் உள்ளிட்டோர் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை ஆற்றினர்.

அங்கு உரையாற்றிய நிலாந்தன் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசமாகத் திரட்டுவதற்கு ஒரு பயிற்சி களமாக பயன்படுத்துவதுதான் இந்த தேர்தல். அந்த அடிப்படையில் யார் ஜனாதிபதியாக வர வேண்டும் என்பது இலங்கை மக்கள் மட்டும் தீர்மானிப்பதில்லை. அதில் வெளியில் இருக்கும் அரசுகளின் நலங்களும் சம்பந்தப்பட்டிருக்கும். அப்படிப்பார்க்கப்போனால் அரசின் தலைவராக வரவேண்டும் என்பதை வெளிச்சத்தில் தீர்மானிக்கின்ற ஒரு தேர்தல் களம் இது.

யார் வந்தால் நல்லது யார் வந்தால் கூடாது? இந்த அடிப்படையில் வெளிச சக்திகளின் நலன்களும் சம்பந்தப்பட்ட இந்தத் தேர்தல் களத்தில் ஒரு சிறிய மக்கள் கூட்டமாகிய நாம் ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கி எல்லாருடைய நிம்மதியையும் கெடுத்திருக்கின்றோம். அந்த பொதுக் கட்டமைப்பு இலங்கை தீவின் நவீன வரலாற்றில் ஒரு புதுமை. ஒரு சில கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச்சபை என்று அழைக்கப்படுகின்ற அமைப்பும் ஒரு கட்டமைப்பைஉருவாக்குவதுஎன்பதுதமிழ்தேர்தல் வரலாற்றில் இலங்கைத் தேர்தல் வரலாற்றில் இதுதான் முதல் தடவை. இதற்கு முன் தமிழ் மக்கள் பேரவை உங்களிடம் இருந்தது. ஆனால் அங்கே கட்சிகளும் சிவில் மக்கள் பிரதிநிதிகளும் இணைந்து. புரிந்துணர்வு உடன்படிக்கைஎழுதியிருக்கவில்லை. இரண்டு தரப்பு இணைந்து ஒரு வேட்பாளரையும் நிறுத்தவில்லை. ஆனால் அதுவும் தமிழ் மக்களின்மகத்தானபரிசோதனைகளில்ஒன்று. தமிழ் மக்கள் பேரவை இல்லாமல் போய் கிட்டத்தட்ட 8 ஆண்டுகள் சென்றிருக்கின்றன. அதன் பின்னர் இப்படி ஒரு கட்டமைப்பு வர 8 ஆண்டுகள் சென்று இருக்கின்றன.

தமிழ் மக்கள் ஒரு திடமான ஆயுத போராட்டத்தை நடத்திய மக்கள். எங்களுக்கென்று நூதனமான இயல்புகள் உண்டு. அத்தகைய ஈழத் தமிழர்களாகிய நாம் இன்றைக்குப் பல கூறுகளாகச் சிதறிப் போய் இருக்கின்றோம். உலகிலேயே தனக்காக இல்லாமல் தனது மக்களுக்காக வாக்கு சேர்க்கும் ஒரு வேட்பாளரை நீங்கள் கண்டிருக்கிறீர்களா? அரியநேத்திரன் இலங்கைதீவின் தேர்தல் வரலாற்றிலும் இந்த பிராந்தியத்தின் ஜனநாயக வரலாற்றிலும் ஒரு புதுமை. ஆளும்தரப்புத் திறந்து விட்டிருக்கும் ஒரு தேர்தல் தளத்தை ஒரு சிறிய மக்கள் கூட்டம் செயல்முனைப்போடு அணுகுவதே புதுமைதான். அந்த தேர்தல் தளத்தை தேர்தலாக அணுகாமல் மக்களை திரட்டும் ஒரு பயனுகையாகபயில்வதுஎன்பதுஇரண்டாவது புதுமை. ஒரு வேட்பாளர் தனக்கு வாக்கு சேர்க்காமல் தனது மக்களுக்காக வாக்கு சேர்த்தது என்பது மூன்றாவது புதுமை.

பேரரசுகளின்நலன்கள்சம்பந்தப்படும்ஒரு களத்தில் ஒரு சிறிய மக்கள் கூட்டம் துனிந்து முடிவெடுத்து கிறுக்குத்தனமாக ஒரு தேர்தலை எதிர்கொள்வது என்பது நான்காவது புதுமை. ஆயுதப்போராட்டத்தை படைத்த அதே மக்கள் மீண்டும் ஒரு புதுமையை படைக்கிறார்கள் எனவே உங்களுடைய வாக்குகளை அரியநேத்திரனுக்கு வழங்குங்கள் - என்றார்.

அரியநேத்திரன் தனது உரையில் தெரிவித்ததாவது:

ஆயுத ரீதியாக நாங்கள் போராடி இருக்கின்றோம். அகிம்சை ரீதியான போராட்டம் இன்று இடம்பெறுகின்றது. பல்வேறுபட்ட அடக்குமுறைகள் இடம் பெற்றுக்கொண்டிருந்தபோது தந்தை செல்வா அகிம்சை ரீதியான போராட்டத்தை ஆரம்பித்திருந்தார். அதற்கு பிற்பாடு 1978 ஆம் ஆண்டு இலங்கையிலே கொண்டுவரப்பட்ட புதிய அரசியல் யாப்பை நிறைவேற்றி அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

1982 ஆம் ஆண்டு முதல் முதலாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அறிமுகப்படுத்தப்பட்ட போது கூறப்பட்ட விடயங்கள் என்னவென்றால் ஆணை பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் தவிரமற்றெல்லாவற்றையும்இந்தப்பதவியால் செய்யமுடியும் என்பதுதான்.

ஆனால் அந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின் கீழ் இலங்கையில்ரணில்விக்கிரமசிங்கவரையும் எந்த ஜனாதிபதியும் தமிழர்களுக்கான தீர்வைத் தரவில்லை.

அரசியலிலே நாங்களும் பலரை ஆதரித்திருக்கின்றோம். தெரிவு செய்யப்பட்ட அத்தனை ஜனாதிபதிகளிடமும் எங்கள் தலைமை பேசியது. அது சரிவராமல் போக, வட்டுக்கோட்டை தீர்மனத்திற்கான ஒரு ஆணையை 1977 ஆம் ஆண்டு ஜூலை 21 நிறைவேற்றினார் தந்தை செல்வா.

அதற்குப் பிறகு ஆயுத போராட்டம் இடம்பெற்றபோது 36 விடுதலை இயக்கங்கள் இந்த எதற்காகப் போராடின? இலங்கை இந்தியா ஒப்பந்தம் 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 செய்யப்பட்டது.

பொது வேட்பாளரை நிறுத்திய பின்னராக புலம்பெயர்ந்து இருக்கின்ற தமிழ் மக்களை ஒருமித்த நிலையில் காணக் கூடியதாக இருக்கிறது. அவர்கள் எல்லோரும் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்று கூறி இருக்கிறார்கள். உலகத்திலே எந்த ஒரு நாட்டிலும் இல்லாதவாறு ஒரு வேட்பாளருக்கு ஆதரவழங்கி வருகிறனர்.

நான் வெற்றி அடைய வேண்டும் என்றால் நாங்கள் நாங்களாக இருக்க வேண்டும் பொதுமக்கள் பொதுமக்களாக இருக்க வேண்டும் நாங்கள் உறுதியாக இருக்க வேண்டும் - என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com


காலைக்கதிர் Kalaikkathir

## இந்திய முதலீட்டாளர் அதானியின்

# காற்றாலை மின்திட்டத்தை நிச்சயம் இரத்துசெய்வோம்

## அனுரகுமார உறுதி





ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டால் இந்தியாவின் அதானி நிறுவனத்தின் காற்றாலை மின்திட்டத்தினை இரத்துசெய்வேன் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் ஊழல்மிகுந்தது இலங்கையின் நலன்களிற்கு எதிராக செயற்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒரு யூனிட்டிற்கு என்ற அடிப்படையில் அதானியிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்கின்றது,அதேநேரத்தில் இலங்கை நிறுவனம் என்ற அடிப்படையில் மின்சாரத்தை வழங்குகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

அதானிநிறுவனத்தின்திட்டம்அளவுபெரியதுஎன்பதை கருத்தில் கொள்ளும் போது அதன்செலவீனங்கள் குறைவாகயிருக்கவேண்டும், ஆனால் அதற்கு மாறானாநிலைகாணப்படுகின்றதுஎனத்தெரிவித்துள்ள அனுரகுமாரதிசநாயக்க, நாங்கள் இந்த ஒப்பந்தத்தை நிச்சயமாக இரத்துச்செய்வோம் எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடபகுதியில் மன்னார் பூநகரியில் காற்றாலைமின் உற்பத்தி திட்டத்தினை அதானி கிரீன்ஸ்; நிறுவனம் முன்னெடுப்பதற்கு 2023 பெப்ரவரியில் இலங்கையின் முதலீட்டு சபை அனுமதி வழங்கியது.

இதன் பின்னர் இந்தத் திட்டம் சட்டசவால்களை எதிர்கொண்டுள்ளது.(05)

# தேர்தல் கண்காணிப்பாளர்கள் மட்டக்களப்பில் கலந்துரையாடல்



எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதி தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக சர்வதேச தேர்தல் கண்காணிப்புக் குழு ஆலோசகரும் தென்கிழக்காசிய நாடுகளுக்கான சுதந்திர தேர்தல் ஆலோசகருமான இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜகே பர்க்கர் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல்கண்காணிப்பாளர்களுடன் கலந்துரையாடிய அவர் காத்தான்குடி கஃபே தேர்தல் கண்காணிப்பு அலுவலகத்துக்கு சென்று, அங்கு கஃபே அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார்.

இச்சந்திப்பில் கஃபே தேர்தல் கண்காணிப்பு ஆலோசகர் கலாநிதி எம். தயாபரன் மற்றும் கபே மட்டக்களப்புமாவட்ட இணைப்பாளர் தேசமானிய ஏ.எல். மீரா சாஹிபு உட்பட தேர்தல் கண்காணிப்பு அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

வன்முறையற்ற தேர்தல், அமைதியான முறையில் வாக்களிப்பு உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக இதன்போது ஆலோசிக்கப்பட்டதுடன் வாக்குரிமை இல்லாத பாடசாலை மாணவர்களை தேர்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவது தொடர்பாக பாடசாலை மாணவர்களால் விநியோகிக்கப்பட்ட வேட்பாளர்களின் பிரசுரங்களும்சர்வதேசகண்காணிப்பு ஆலோசகருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# டுபாயிலிருந்து கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

டுபாயிலிருந்துசட்டவிரோதமாகஇலங்கைக்குகொண்டுவரப்பட்ட 6200 (31 கார்டூன்கள்) வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் சந்தேக நபர் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்தில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியக கட்டுநாயக்க விமான நிலைய பிரிவின் அதிகாரிகள் குழு மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கொழும்பு 13 பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியக கட்டுநாயக்க விமான நிலையப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.09.2024இல் வெளியிடப்பெற்றது